உ

சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ஞு ஆவணி மீ 26 ஆம் உ
(1889)

பிரதி விலை: ரூபா 12
செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

# இந்து சாதனம்
## (HINDU ORGAN)

புத்தகம்: 112 | விஷு வருடம் பங்குனித் திங்கள் 14 ஆம் நாள் (28-03-2002) பங்குனிப் பூரணை | இதழ் 12

### தமிழர் பிரதேசம் இயல்பு நிலைக்குத் திரும்பும்

### யாழ் - கண்டி நெடுஞ்சாலையில் போக்குவரத்து

### இனப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வு

### பல எதிர்பார்ப்புகளுடன் புத்தாண்டு பிறக்கிறது

# வையகம் துயர் தீர்கவே!

**நல்ல பல மாற்றங்கள் ஏற்படவிருக்கின்றன, சமாதானம் மலரும். தமிழ் பேசும் மக்கள் சுய கௌரவத்துடன் வாழக் கூடியதான அரசியல் தீர்வு ஒன்று இனப்பிரச்சனைக்கு ஏற்படும் போன்ற பல நம்பிக்கைகளுடனும் எதிர்பார்ப்புகளுடனும் சித்திரபானு என்ற அழகிய நாமம் தாங்கிய புத்தாண்டு இன்னும் இரு வாரங்களில் பிறக்கிறது.**

கடந்த இரு தசாப்தங்களாகப் பல துன்பங்களுக்கு முகம் கொடுத்த மக்கள் பிறக்கும் புத்தாண்டை நம்பிக்கையோடு எதிர்கொள்கின்றனர்.

மக்கள் தமது நாளாந்தச் செயற்பாடுகளைச் சுதந்திரமாக மேற்கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும். இராணுவக் கெடுபிடிகள் இருக்கக்கூடாது. தாம் வாழ்ந்து வந்த தமது சொந்த நிலத்தில் மீளக் குடியேற அனுமதிக்கப்பட வேண்டும். யாழ் - கண்டி நெடுஞ்சாலையூடாக எதுவித கட்டுப்பாடுமின்றி குடா நாட்டுக்கு வெளியே சென்று வரக் கூடியதாக இருத்தல் வேண்டும். அதன் விளைவாகப் பாவனைப் பொருட்கள் தாராளமாகவும் நியாய விலையிலும் கிடைக்க வேண்டும். சிறையில் வாடும் இளைஞர்கள் விடுவிக்கப்படவேண்டும்.

திருக்கேதீச்சரம், நகுலேஸ்வரம், மாவிட்டபுரம், கீரிமலை போன்ற புனிதவிடங்களுக்குத் தங்கு தடையின்றிச் செல்லவும் தமது சமயக் கடமைகளை நிறைவேற்றவும் வழி படவும் வசதிகள் செய்து தரப்பட வேண்டும். இப்புனித இடங்களின் சுற்றாடலில் மக்கள் மீளக் குடியமர்வதற்கு முன்னுரிமை தரப்பட வேண்டும். இப்புனித தலங்களின் முதற்கட்டப் புனரமைப்பைத் துரிதப்படுத்தி மகா கும்பாபிஷேகங்கள் நிகழவைத்து அங்கு வழிபாடுகள் நடைபெற ஆவன செய்ய வேண்டும். வீதிகள் புனரமைக்கப்பட்டு போக்குவரத்து வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும் மின்சார, தொலைத்தொடர்பு வசதிகள்

(9ம் பக்கம் பார்க்க)

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவிலை
கண்ணில் நல் அஃதுறு கழுமல வளநகர்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

— சம்பந்தர்

வான் முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க
மன்னன் கோன் முறை அரசு செய்க குறைவிலா
துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

— கச்சியப்பர்

உ

# ஆறுமுகநாவலர் முதல் பண்டிதமணி வரை சைவம் வளர்த்த சான்றோர்கள் - (16):

# சைவப்பெரியார் புலோலியூர் சிவபாதசுந்தரனார்

(புத்தகம் 112, இதழ் 11 இன் தொடர்ச்சி)

### பேரம் பேசமுடியாத கொள்கை

சைவ வாழ்க்கை வாழுவதும், சைவத்தின் மேன்மையை ஏனையோருக்கு உணர்த்தி அவர்களைச் சைவவாழ்வு வாழவைப்பதும் சைவத்தைப் பிறமதத் தாக்கங்களிலிருந்து காப்பாற்றுவதுமே பெரியாருக்கு உவப்பான செயற்பாடுகள்.

'Glories of Saivaism' (சைவத்தின் மகிமை) என்ற அவரெழுதிய கடைசி நூலிலே சைவ வாழ்க்கை (The Saiva Life) என்ற அத்தியாயம் பின்வருமாறு தொடங்குகிறது. ''A Saivite is a worshipper of Siva, the Supreme God. The Saivite must therefore lead a life consonant with the greatness of the God he worships. He has a dignity to maintain .. (முழுமுதற் கடவுளாகிய சிவனை வழிபடுபவன் தான் சைவசமயி. ஆகவே சைவனொருவன், தான் வழிபடுகின்ற கடவுளினது மகத்துவத்துக்கு இசைவானதொரு வாழ்வை நடத்துதல் வேண்டும். இதற்கிசைவான மேனிலையொன்றைப் பேணவேண்டிய கடப்பாடொன்று அவனுக்குண்டு ...)''

இவ்வாறு ஆரம்பித்து, அப்பர் சுவாமிகளின் ''நாமார்க்கும் குடியல்லோம்'' எனத் தொடங்கும் தேவாரத்துள் நுழைந்து சைவனொருவனது வாழ்க்கை எவ்வாறு அமையவேண்டுமெனத் தெளிவாகக் கூறிவைத்துள்ளார். அவ்வழி வாழ்ந்தும் காட்டினார்.

எவ்வளவு பெரிய பிரமுகரானாலும் சரி, தனது சுயநலத்திற்கு உதவிகள் பெறுவதற்காக, தனது கொள்கையைக் கைவிடவோ மாற்றவோ மாட்டார்.

திருக்கேதீச்சர ஆலயத்தில் நவக்கிரகங்களுக்குக் கோவில் அமைத்தமையை ஏற்றுக்கொள்ளாது திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச்சபைத் தலைமைப் பதவியிலிருந்து விலகியமை, சமய விடயங்கள் பற்றி அரசாங்கம் சட்டம் இயற்றுவதை மூர்க்கத்தனமாக எதிர்த்தமை ஆகியன பெரியாருடன் அடிப்படைக் கொள்கைகளில் பேரம் பேச முடியாது என்பதற்கு நல்ல உதாரணங்கள்.

''எல்லாச் சமயங்களும் ஒன்று'' ''சமய சமரசம்'' போன்ற போலிச் சுலோகங்கள் பெரியாரின் காதிற் கேட்கத் தகாதன. இவ்வாறு போலிச் சுலோகங்கள் எழுப்புபவர்களைப் பெரியார் அவர்கள் ''சைவத்துரோகிகள்'' என அழைக்கத் தயங்கவில்லை. ''நான் கண்ட சிவபாத சுந்தரனார்'' என்ற நூலை எழுதிய பெரியாரின் அபிமானியொருவர் தமது அனுபவமொன்றைப் பின்வருமாறு எழுதுகிறார்.

(இவ்வபிமானி யாழ்ப்பாணத்தில் வேலை பார்த்தபோது பெரியாரின் கந்தவனக் கடவைத் தபோவனம் சென்று சந்தேகம் தெளிந்து வந்தவர். பின் கொழும்புக்கு வேலை மாற்றம் கிடைத்து கொழும்பில் கடமையாற்றும்போது நடந்த சம்பவத்தையே இங்கு எழுதியுள்ளார்.)

யானும் புறதேசத்திற்கு மாறவேண்டிய நிலை வந்தது. இடையிடையே கடிதம் எழுதுவதுண்டு. அவருடைய பதில்கள் மிகவும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் இருக்கும். ஒருமுறை நான் இருக்கும் பக்கத்தில் நாவலர் பெருநாளைக் கொண்டாட உத்தேசித்தார்கள். அதனில் நானும் ஏதோ பங்குபற்றினேன். ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரையல்லவா? நாவலர் பெரிய கல்விமான் என்று தெரியும் நிதானமாக ஒன்றை எடுத்துச் சொல்ல எனக்கு வராது. பிள்ளையவர்களிடம் ''நாவலர் பிரபந்தத் திரட்டு'' ஒன்று இருந்தது. அதைப்பெற்றால் ஒருவாறு சமாளிக்கலாம் என்று எண்ணினேன். ஒரு கடிதம் வரைந்தேன். அப்புத்தகத்தை இரவல் தருமாறு கேட்டேன். இடையிடையே அங்கு நடந்த சில சம்பவங்களையும் குறித்தேன். ..... ... (மனக்கசப்பு ஏற்படாதிருக்கப் பெயர் பிரசுரிக்கபபடவில்லை) என்றொருவர் வந்தார். பார்த்தால் பெரிய கல்விமான் போலிருந்தார். துறவியாக காவியுடை தரித்துக் காட்சியளித்தார். ஆனால் அவருடைய பேச்சு மட்டும் எனக்கு அதிகம் பிடிக்கவில்லை. ஆங்கிலத்திற் பேசும்போது எல்லாச் சமயங்களும் ஒரே கடவுளையடையும் பல வழிகளென்றும், தமிழிற் பேசும்போது சைவம் தான் ஒரேயொரு மெய்ச்சமயமென்றும் இவ்வாறு ஒரே மூச்சில் முரண்பாடாகப் பேசினார் என்று வரைந்தேன். அவரிடத்தில் ஒரு சிறந்த குணம் உண்டு. யாவர் எழுதினாலும் உடனே பதில் எழுதுவார். அடுத்த நாள் புத்தகம் வருமென்று காத்திருந்தேன். புத்தகம் வரவில்லை கடிதமொன்று கிடைத்தது. (அக்காலத்தில் முதனாள் யாழ்ப்பாணத்தில் தபாலிலிட்ட கடிதம் அடுத்த நாள் கொழும்பில் கிடைத்துவிடும்). அதனை உடைக்கவே என்னை அறியாமல் எனக்கொரு பயம். ஏதோ காரசாரமான சரக்கு அதற்குள் கிடக்கிறதென்று மனம் கூசியது. பதில் பின்வருமாறு - ''உனக்கு நாவலரைப் பற்றிப் பேசவே உரிமை கிடையாது. எல்லாச் சமயங்களும் ஒன்று என்று சொல்லும் கூட்டத்தாரை சேரவோ பார்க்கவோ வேண்டாமென்று உனக்குப் பன்முறை கூறியிருக்கிறேன். அதற்கு மாறாக .. ... (பெயர் மறைக்கப்பட்டுள்ளது) இன் கூட்டத்திற்குப் போனமையால், சைவசமயமே மெய்ச்சமயம் என்று வாழ்ந்த நாவலரின் பிரபந்தத்தைத் தொடவே நீ உரியவரல்ல!'' என்று பளிச்சென்று மறுமொழி வந்தது.

இக்கடிதம் என் கண்ணைப் பரக்கத் திறந்ததும், ''எல்லாச் சமயங்களும் ஒன்று'' என்ற இந்தப் புதிய கலியுக சமரசந்தம் எவ்வாறு உற்பத்தியானது என்று ஆராயத் தொடங்கினேன். கடவுளே இல்லையென்று சொல்லும் புத்த சமயமும், மறுபிறப்பு கர்மபலன் என்பவற்றைப் பற்றி அறியாத கிறிஸ்தவமும், ஆணவம், கன்மம், மாயை, ஆன்மா, கடவுள், மோட்சம் முதலியவற்றை விதந்து கூறும் சைவசமயமும், எவ்வாறு 'ஒன்று' ஆகும்? இதுதான் முதற் கேள்வி. இரண்டாவதாக எல்லாம் ஒன்றென்று பறைசாற்றப் புத்தன்.

(10ம் பக்கம் பார்க்க)

காரைக்கால் அம்மையார் குருபூசை: பங்குனி சுவாதி (31-03-2002)

# இறவாத இன்ப அன்பு

திருமுறை ஆசிரியர்கள் இருபத்தெழுவருள் பெண்ணாகப் பிறந்தவர் என்ற பெருமைக்குரியவர் காரைக்கால் அம்மையார் தமிழ்த் திருநாடு தரணிக்கு வழங்கிய பெண்டிருள்ளே ஈடிணையற்ற தெய்வத்தன்மை பொருத்தியவர். எம் பெருமானால் "நம்மைப்பேணும் அம்மை" எனச் சிறப்பிக்கப்பட்ட பெருமை பெற்றவர்.

சேக்கிழாரது பெரிய புராணமாகிய திருத்தொண்டர் மாக்கதைகளில் ஒன்றாகிய காரைக்காலம்மையார் புராணத்தில், அம்மையார் சிறுவயதில் "வண்டல் பயில்வன எல்லாம் வளர்மதியம் புனைந்த சடை அண்டர்பிரான் திருவார்த்தை அனைய வருவன" பயின்றும், சிவதொண்டர் வரும்போது அவர்களைத் தொழுதும் வளர்ந்து இல்லிகவாப் (வீட்டினின்று வெளியே செல்லக்கூடாத) பருவத்தை அடைந்ததாகவும், பரமதத்தன் என்ற வணிகனுக்கு வாழ்க்கைப்பட்ட பின் "பொரு விடையார் திருவடிக்கீழ் ஓங்கிய அன்புறு காதல் ஒழிவின்றி மிகப் பெருக" நல்ல பான்மையுடன் அமைந்த இல்லறத்தின் பண்பு பிறளாதும்,

"நப்பர் அடியார் அணைந்தால்
நல்லதிரு அமுதளித்தும்
செப்பொன்னும் நவமணியும்
செழுந்துகிலும் முதலான
நப்பரிவினால் அவர்கட்குத்
தகுதியின் வேண்டுவ கொடுத்தும்
உம்பர் பிரான் திருவடிக்கீழ்
உணர்வு மிக ......"

வுடையவராக ஒழுகி வந்தாரெனவுமே அம்மையாரது சிறுபராயச் செயற்பாடுகளையும் இல்லற தர்மத்தில் அவர் கடைப்பிடித்த பண்புகளையும் கூறும் போது சேக்கிழார் சுட்டிக்காட்டியுள்ளார். சிறுவயதிலோ இல்லறத்தில் இருக்குங் காலத்திலோ அம்மையார் இலக்கண, இலக்கியங்களைக் கற்றதாகவோ செய்யுள் பாடும் திறமடைந்து திகழ்ந்ததாகவோ கூறவில்லை.

இல்லறத்திருந்த அம்மையாரிடம் பின்வரும் மூன்று பெருங்குணங்கள் பொருந்தியிருந்தன: பொருவிடையார் திருவடிக்கீழ ஒழிவின்றி மிகப் பெருகுகின்ற அன்புறுகாதல், இல்வாழ்வில் கணவனுக்கு அருந்துணையாய் அமர்ந்து பணி செய்தல், தம் இல்லத்தை நாடி வரும் சிவனடியார்களுக்கு நல்ல திருவமுதும் அவரவர் தகுதிகேற்ப வேண்டுவ கொடுத்தல்.

அம்மையார் இல்லற பந்தபாசம் யாவும் கடந்த சீவன் முத்த நிலையிலிருக்கும் ஆன்மா. எஞ்சி நின்ற பிராரப்தத்தை அனுபவித்து முடிப்பதற்காகப் பிறவியெடுத்து இல்லறத்தில் இருக்கிறது. அந்தப் பந்த பாசங்களிலிருந்து விடுபடும் காலம் நெருங்கவே திருவிளையாடல் ஒன்று நடைபெறுகிறது.

அம்மையார், பசித்துவந்த சிவனடியார் ஒருவருக்குத் தம கணவர் கொடுத்தனுப்பிய இரு மாங்கனிகளுள் ஒன்றினை உணவாகப் படைத்து உபசரித்தார். எஞ்சியிருந்த பழத்தினைக் கணவன்வந்தபோழ்து உண்ணுமாறு அளித்தார். ஆனால் அவனோ மற்றைய பழத்தையும் கேட்டான். உளம் நடுங்கிய அம்மையார் இறைவனை வேண்டி ஒரு பழத்தினை வரவழைத்துக் கொடுத்தார். முன்னையினும் இனித்த அப்பழம் ஏதென வினவினான் கணவன். அம்மையாரும் என்ன செய்வதென்றறியாது உண்மையினைக் கூற, அவன் நம்பவில்லை. உண்மையைச் சோதிக்க விரும்பினான். அம்மையார் இறைவனை வேண்ட அவரது கூப்பிய கரங்களில் மற்றொரு பழம் தோன்றிற்று. ஆனால் அது கணவன் கைச் சென்றதும் மறைந்தது. விதி வென்றது. தெய்வீகத்தன்மை பொருந்திய மனைவியொடு வாழ்தல் இயலாதென்றெண்ணிய பரமதத்தன் வாணிபத்தினை முன்னிட்டுச் செல்வதாகக் கூறி அவளைவிட்டுப் பிரிந்து சென்று, மற்றொருத்தியை மணந்து வாழ்ந்தான். செய்தியறிந்த அம்மையாரின் சுற்றத்தார் கணவனிடத்து அவரைக் கொண்டு சேர்ப்பதே சரியென்றெண்ணி, அவனிடம் அழைத்துச் சென்றனர். ஆனால் பரமதத்தனோ அம்மையாரை வணங்கி, கடவுட்டன்மை பொருந்திய அன்னாரோடு வாழ்தல் இயலாது எனக் கூற, அம்மையார் அதுவரை அவனுக்காகத் தாங்கிநின்ற தசையாகிய உடலை நீக்கிவிட்டுப் பேயுருவைத் தருமாறு சிவனை வேண்டிப் பெற்றுச் சிவ கணங்களுள் ஒன்றானார். பேயுருவைக்கண்ட சுற்றத்தார் வணங்கிப் பயந்து நீங்கிச் சென்றனர். இப்போ அம்மையாரிடம் ஒரே ஒரு குணம்தான் எஞ்சி நிற்கிறது; அது பொருவிடையார் திருவடிக்கீழ் ஓங்கிய இறவாத இன்ப அன்பு.

உடல் பேயுருப் பெற்றபோது, உள்ளம் ஞான ஒளி பெற்றது. அந்தத் தெய்வீக நிலையில் உள்ளம் இறைவனை நினைந்து நினைந்து கசிந்து உருக, அருட்பாடல்கள் வெளிப்பட்டன. இவ்வாறு உள்ளே தோன்றி மேல எழுந்த ஒருப்பட்ட ஞானத்தால் அருளிச் செய்யப்பட்ட அருட்பாடல்கள் அற்புதத்திருவந்தாதியும் திருவிரட்டை மணிமாலையுமாகும்.

"உற்பவித் தெழுந்த ஞானத்
தொருமையின் உமைகோன் தன்னை
அற்புதத் திருவந்தாதி
அப்பொழுதருளிச் செய்வார்"
"ஆய்ந்தசீர் இரட்டைமாலை
அந்தாதி எடுத்துப்பாடி"

என்பன சேக்கிழார் திருவாக்கு. அம்மையார் பொருந்திய பேருணர்வு மேலும் மேலும் பெருகி எழ, மனோவேகத்தைவிட அதிக வேகமாகத் காலாலும் பின் தலையாலும் நடந்து சென்று திருக்கைலையை அடைந்தனர்.

காரைக்கால் அம்மையாரை "இவள் நம்மைப் பேணும் அம்மை காண்" என உமாதேவியாருக்கு அறிமுகம் செய்யுமாப்போல் அருளிச் செய்த அங்கணன், "அம்மையே" என்று அழைத்திடலும் "அப்பா!" என்று ஆர்வத்துடன் பங்கயச் செம்பொற்பாதம் பணிந்து வீழ்ந்து எழுந்த அம்மையாரை நோக்கி "நம்மால் இங்கு வேண்டுவது என்?" என எம் பெருமான் வினவ, அம்மையார் கேட்ட முதல் வரம் இறவாத இன்ப அன்பு!

(4ம் பக்கம் பார்க்க)

# இறவாத இன்ப அன்பு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

**''இறவாத இன்ப அன்பு**
**வேண்டிப்பின் வேண்டுகின்றார்**
**பிறவாமை வேண்டும்; மீண்டும்**
**பிறப்புண்டேல் உன்னை என்றும்**
**மறவாமை வேண்டும்; இன்னும்**
**வேண்டும் நான் மகிழ்ந்து பாடி**
**அறவா நீ ஆடும்போது உன்**
**அடியின் கீழ் இருக்க என்றார்''**

இறவாத இன்ப அன்புக்கு அம்மையார் கொடுத்துள்ள முன்னுரிமையும் அதை வேண்டிய பின்பே ஏனைய வரங்களைக் கேட்டமையைச் சேக்கிழார் அழுத்திக் கூறுவதையும் இங்கு காண்கிறோம்.

வரம் அருளப் பெற்ற அம்மையார், இறைவர் ஆணைப்படி திருவாலங்காடு சென்று அங்கு மூத்த திருப்பதிகங்கள் எனப்படும் இரு திருப்பதிகங்களை அருளிச் செய்தபின் எடுத்தருளும் சேவடிக்கீழ் என்றும் இருக்கின்ற பேற்றைப் பெற்றனர்.

கி. பி. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் காரைக்கால் அம்மையார், சைவ சமய குரவர்களுக்கு முன்பே சைவ உலகுக்கு பக்தி இலக்கியத்தை வழங்கிய பெருமையை உடையவர். அதனால் அவரது திருப்பதிகங்கள் இரண்டும் மூத்த திருப்பதிகங்கள் என வழங்கப்படலாயிற்று.

மெய்யறிவு கைவரப் பெற்ற அம்மையார் முதன் முதலாகப் பாடியருளியது அற்புதத் திருவந்தாதி. அற்புதத் திருவந்தாதி புதுமையான போக்குடையது. இவ்வந்தாதியின் சிறப்பு நோக்கியே சான்றோர் இவ்வந்தாதியை அற்புதத் திருவந்தாதி என அழைத்தனர்.

அற்புதத் திருவந்தாதி ஓதுதற்கு இனிமையும் எளிமையும் உடையது. அறிதற்கரிய சிவஞானத்தின் இயல்பைத் தெளிவாக விளக்குவது. மெய்யன்போடு ஓதுவோர் உள்ளத்தை உருக்க வல்லது.

அம்மையார் தாம் பெற்ற திருவருள் மெய்யறிவினைத் தன்மை நிலையில் வைத்து உலகத்தாருக்கு அறிவுறுத்தும் பாடல்களும் தம்மைப் போன்ற அடியார்களுடைய இயல்பை விரித்துரைக்கும் பாடல்களும் சிவபெருமானது அருட்கோலங்களையும் திருவருட்செயல்களையும் எண்ணிச் சிவபெருமானை முன்னிலைப்படுத்தி அழைத்து உரையாடி மகிழும் பாடல்களும் இவ்வற்புதத் திருவந்தாதியை அணி செய்கின்றன.

இறைவனை நினைந்து கசிந்து உருகி இன்ப அன்பு நிறைந்த உள்ளத்தினின்று பொங்கி வழியும் இன்ப அன்பு உணர்ச்சியின் வெளிப்பாடாக அமைந்த இப்பாமாலைகள் சொல்லாழமும் பொருளாழமும் நிரம்பப் பெற்றவை. இத்திருப்பாடல்களில் பொருளற்ற சொல்லடுக்குகள் இல்லை. தேவையற்ற கற்பனைகளும் இல்லை. கேட்பவரைப் பிணிக்கும் தகையன அம்மையாரது திருப்பாடல்கள். இத்திருப்பாடல்கள் மூலம் இறவாத இன்ப அன்பு பற்றி அம்மையார் கூறுபவற்றை மட்டும் இங்கு நோக்குவோம்.

ஒருவர் மேற்கொண்ட அன்பு, அதன் மூலமாக வேறெதையும் பெறலாம் என்ற நோக்கத்தோடு ஏற்படாததொன்றாயின் அது இறவாத அன்பு - நிரந்தர அன்பு. அதற்குக் கிட்டிய உதாரணம் தாயன்பு. தாயிடம் கூட பிள்ளையிடம் உடனடியாக எதையும் பெறலாம் என்ற நோக்கம் இல்லாதிருப்பினும், தனது முதுமைக் காலத்தில் பிள்ளையின் உதவி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு இருககத்தான் செய்கிறது. எதிர்பார்ப்பு எத்துணையும் அற்ற அன்பு தான் இறைவன் ஆன்மாக்கள் மீது கொண்ட அன்பு. அதனாற்றான் இறைவன் ''தாயினும் நல்ல தலைவர்'' என்றும் ''பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்'' பரிவுள்ளவர் என்றும் அடியார்களால் போற்றப்படுகிறார்.

இறைவன் ஆன்மாக்கள் மீது கொண்டுள்ளது போன்றதொரு அன்பு ஆன்மாக்களுக்கு இறைவன் மீது ஏற்படுதல் வேண்டும். அந்த நிலை ஏற்படும்போது கோபப்படவோ, பயப்படவே, துக்கப்படவோ, ஆன்மாவுக்கு நியாயபூர்வமான காரணமெதுவும் இல்லாததாகிவிடும். எம்மீதான இறைவனின் கருணை எல்லையற்றது. இவ்வுலகில் நடைபெறுவது அனைத்தும் இறைவனது கருணையின் நியமந்தால் விளைவன. ஆகவே நடப்பன அனைத்தும் எமக்கு எப்போதும் நல்லனவாகவே இருக்கும் என்ற திடமான நம்பிக்கை எப்போது நமக்கு ஏற்படுகிறதோ அப்போது இறைவன்மீது நாம் வைக்கும் அன்பு இனப அன்பாக அமைகிறது.

நாம் இறைவன் மீது கொண்ட அன்பு இன்ப அன்பெனில், நாம் அவன்பாலுற்ற அன்பால் நமக்கு நன்மை எதுவும் கிடைக்கவில்லையென்றாலும் அந்த அன்பு அற்றுவிடாது. இதையே அம்மையார்

**''இடர்களையா ரேனும் எமக்கு**
**இரங்காரேனும்**
**படருந் நெறி பணியாரேனும்**
**- சுடர் உருவில்**
**என்பறாக் கோலத்து எரியாடும்**
**எம்மானார்க்கு**
**அன்பு அறாது என் நெஞ்சு**
**அவர்க்கு''**

என அற்புதத் திருவந்தாதியில் அழகுறக் காட்டியுள்ளார்.

அவ்வாறான - எதிர்பார்ப்புகள் அற்ற- இன்ப அன்பைப் பெருக்க வேண்டும் என நெஞ்சுக்கு உபதேசிக்கிறது இன்னுமோர் திருப்பாட்டு.

**''மகிழ்தி மட நெஞ்சே மானுடரில்**
**நீயும்**
**திகழ்தி பெருஞ்சேமஞ் சேர்ந்தாய்**
**— இகழாதே**
**யாரென்பே யேனும் அணிந்துழல்**
**வார்க்(கு) ஆட்பட்ட**
**பேரின்பே இன்றும் பெருக்கு''**

இன்ப அன்பு ஏற்பட்ட உள்ளம் புண்படாது (மன) நிறைவோடு அமைதி பெற்றிருக்கும்:

**''பிறையும் புனலும் அனல் அரவும்**
**சூடும்**
**இறைவர் எமக்கிரங்கா ரேனும்**
**— கறைமிடற்று**
**எந்தையார்க்கு ஆட்பட்டேம் என்**
**றென்றிருக்குமே**
**எந்தையா உள்ளம் இது''**

இவ்வாறு இன்ப அன்பு பூணாதிருந்தால் அண்டருலகம் கிடைக்குமென்றாலும் நான் அதை விரும்பமாட்டேன்; அவனுக்கு ஆளாயிருப்பது தான் என் கருத்து என்கிறார்:

**''கண்டெந்தை என்றிறைஞ்சிக் கைப்**
**பணிவான் செய்யேனேல்**
**அண்டம் பெறினும் அது வேண்**
**டேன் — துண்டஞ் சேர்**

(5ம் பக்கம் பார்க்க)

# இறவாத இன்ப அன்பு

(4ம் பக்கத் தொடர்ச்சி)

**விண்ணாளுந் திங்களாய் மிக்குல**
**கம் ஏழினுக்கும்**
**கண்ணாளா ஈதென் கருத்து"**

இது போன்ற நிலைப்பாட்டையே மணிவாசகரும் கொண்டிருந்தார்:

**"கொள்ளேன் புரந்தரன் மாலயன்**
**வாழ்வு"**

என்பது மணிவாசகர் வாக்கு.

**"இச்சுவை தவிர யான் போய்**
**இந்திர லோக மாளும்**
**அச்சுவை பெறினும் வேண்டேன்"**

என்பார் வைணவ அடியாராகிய தொண்டரடிப் பொடியாழ்வார்.

அழகும் மணமும் கொண்ட மலர்கள் நிறைந்த பசுஞ்சோலையொன்றுள் நுழைந்தவொருவன் "எனக்குக் காட்சியின்பமே போதும்; நுகர்ச்சியின்பம் தேவையில்லை" என்று எண்ணுவானாயினும், அவன் மூக்கை நறுமணம் வந்து துளைக்கத்தான் செய்யும். ஆற்றிலே முழுகுபவன் "தண்மை மிக்க இந்த நீரினில் இருக்கும் போது ஏற்படும் இன்பமே போதும். என் உடலிலுள்ள அழுக்குக் கழுவுப்பட வேண்டிய அவசியமில்லை" என எண்ணுவானாயினும் அழுக்குத் தானாகவே நீங்கத்தான் செய்யும் அதுபோல இறைவனிடம் பலனை எதிர்பார்க்காது இன்ப அன்பு பூண்டிருக்கும் அடியார்கள் பெரும் பயனடைவது திண்ணம். இவ்வாறு அடியவர்களைத் துன்பங்களிலிருந்து விடுவித்து நலம் அருளும் இறைவனின் செயலைப் பின்வரும் திருப்பாடல் மூலம் அம்மையார் வெளிப்படுத்துகிறார்:

**"இறைவனே எவ்வுயிருந் தோற்று**
**விப்பான்; தோற்றி**
**இறைவனே ஈண்டிறக்கஞ் செய்**
**வான் — இறைவனே**
**எந்தாய் என இரங்கும் எங்கள்**
**மேல் வெந்துயரம்**
**வந்தால் அது மாற்றுவான்"**

இறைவன் மீது இன்ப அன்பைச் செலுத்தி அவனது சரணாரவிந்தங்களைச் சார்ந்ததால் "அவன் அருள் பெற்றோம். இனி நமக்கு இடரில்லை" என்ற மன உறுதியும் நம்பிக்கையும் அம்மையாரிடம் ஏற்பட்டதைப் பின்வரும் திருப்பாடல் உணர்த்துகிறது:

**"காலனையும் வென்றோம்; கடுநர**
**கம் கைகழன்றோம்**
**மேலை இருவினையும் வேரறுத்**
**தோம் — கோல**
**அரணார் அவிந்தழிய வெந்தீ அம்**
**பெய்தான்**
**சரணார விந்தங்கள் சார்ந்து"**

இந்த மனவுறுதியை அப்பரடிகளின்,

**"நாமார்க்கும் குடியல்லோம் நமனை**
**அஞ்சோம்**
**நரகத்தில் இடர்ப்படோம் நடலை**
**யில்லோம்**
**ஏமாப்போம் பிணியறியோம் பணி**
**வோம் அல்லோம்**
**இன்பமே எந்நாளுந் துன்ப**
**மில்லை"**

என்ற இன்ப அன்பு தரும் தடங்கலற்ற மகிழ்ச்சியுடன் கூடிய சுதந்திர சைவ வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் தேவாரத்திலும் காண்கிறோம்.

சிவபெருமானுக்கு அன்றி வேறெவருக்கும் இனி ஒரு போதும் ஆட்படுவதில்லை என்ற தனது பெருநிலைப்பாட்டைக் கீழ்வருமாறு அம்மையார் வெளிப்படுத்துகிறார்:

**"அவர்க்கே எழுபிறப்பும் ஆளா**
**வோம்; என்றும்**
**அவர்க்கே நாம் அன்பாவது அல்**
**— லால் பவர்க்கடமேற்**
**பாகாப்போழ் சூடும் அவர்க்கல்லால்**
**மற்றொருவர்க்கு**
**ஆகாப்போம் எஞ்ஞான்றும் ஆள்"**

இவ்வாறாக அம்மையார் தமது இறையனுபவத்தைத் தமது அற்புதத் திருவந்தாதி வாயிலாக எமக்கு எடுத்துக்கூறி, எம்மையும் இறவாத இன்ப அன்பு வழி நடத்தும் விடிவெள்ளியாகத் திகழ்கிறார்.

# செய்தித் தொகுப்பு

**※ சங்கீத பூஷணம் சந்திரசேகரம் அவர்கள் மறைவு:**

யாழ்ப்பாணத்தின் மூத்த சங்கீத வித்துவான்களில் ஒருவரான சங்கீத பூஷணம் பேரம்பலம் சந்திரசேகரம் அவர்கள் 15-03-2002 வெள்ளிக்கிழமை எண்பத்தாறாவது வயதில் அமரரானார். அன்னார் நெடுங்காலம் வட இலங்கைச் சங்கீத சபையின் உபதலைவராகப் பணியாற்றிக் குடாநாட்டின் சங்கீத வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றினார். இரு வருடங்களுக்கு முன்னர் யாழ் பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ முதுகலைமாணிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. அன்னாரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**※ மணிவிழா**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழ உபவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் மணிவிழாவை அவர்களது நண்பர்களும் அபிமானிகளும் கொண்டாடி வருகின்றனர். பேராசிரியர் நலமுடன் வாழப் பிரார்த்திக்கிறோம்.

## சைவப்புலவர் பரீட்சை

சைவப்புலவர், இளஞ் சைவப்புலவர் பரீட்சைகள் சித்திரபானு வருடம் சித்திரைத் திங்கள் 14 ஆம் நாள் (27-04-2002) முதல் மூன்று தினங்களுக்கு நடைபெறும்.

இப்பரீட்சையை அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் நடத்துகின்றது.

சைவப்புலவர் தேர்வுக்கு 67 தேர்வு நாடிகளும் இளஞ் சைவப்புலவர் தேர்வுக்கு 42 தேர்வு நாடிகளும் தோற்றுகின்றனர்.

யாழ் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் இத்தேர்வுகள் நடைபெறும் என சைவப்புலவர் சங்கச் செயலர் சைவப்புலவர் வ. கந்தசாமி அவர்கள் தெரிவித்துள்ளார்.

உ

# மகேசுர வடிவங்கள்

(புத்தகம் 112, இதழ் 11 இன் தொடர்ச்சி)

## உமாமகேஸ்வரர்:

இத்திருவுரு அனுக்கிரக நிலையிலுள்ள வடிவமாகும். இத்திருவுருவில் சிவனும் உமையும் அருகருகே சுகாசனமிட்டிருப்பர். ஒரு காலைத் தொங்கவிட்டும் மறுகாலை மடக்கி இருக்கை மீது வைத்தும் இருக்கும் ஆசனமே சுகாசனம் எனப்படும்.

உமாசகித சுகாசன மூர்த்தம் என்பது சுகாசனமிட்டிருக்கும் இறைவர் சுகாசனமிட்டிருக்கும் தேவியைப் பக்கத்திலுடையவராகக் காட்சி தரும் மூர்த்தமாகும். உமா மகேஸ்வர சுகாசன மூர்த்தம் என்பது சுகாசனமிட்டிருக்கும் இறைவர் சுகாசனமிட்டிருக்கும் தேவியைத் தழுவிய வண்ணம் வீற்றிருக்கும் மூர்த்தமாகும்.

இறைவன் அன்னையுடன் ஒருங்கு இருப்பது ஆருயிர்கள் போகம் துய்ப்பதற்காக என்பதை உணர்த்தும். பாண்டியன் மகளாகத் திருவவதாரம் செய்த தடாதகைப் பிராட்டியார் இறைவனை மணம் புரிந்ததைக் கூற வந்த திருவிளையாடற் புராண ஆசிரியர் பரஞ்சோதி முனிவர், "வையம் புணர்வுறு போகம் மூழ்கப் புருடனும் பெண்ணுமாகி மணவினை முடித்தான்" என்று இக்கருத்தைத் தெளிவுறக் கூறியுள்ளார்.

மாணிக்கவாசகப் பெருமான் தமது திருச்சாழலிலே,

"தென்பால் உகந்தாடுந் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடி
பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பால் யோகு எய்தி வீடுவர் காண் சாழலோ"

என்றும்,

"மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்திருவை
உலகறியத் தீ வேட்டான் என்னுமது என்னேடீ
உலகறியத் தீ வேளாது ஒழிந்தனனேல் உலகனைத்தும்
கலை நவின்ற பொருள்கள் எல்லாம் கலங்கிடுங் காண் சாழலோ"

என்றும் அருளியுள்ளதையும் காணலாம்.

இறைவி இறைவனைப் பிரிந்து மலையரசன் மகளாக வளர்ந்து வருங் காலத்தே, இறைவர் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நான்கு முனிவர்களுக்கும் கல்லால நீழலின் கீழ் யோக நிலையில் அமர்ந்து நல்லுபதேசம் நவிலலுற்றார். இவ்வாறு இறைவர் யோக நிலையில் அமர்ந்திருந்த காலத்தில் ஆண் பெண் முயக்கம் இன்றி உயிர்த்தொகை பெருகவில்லை எனக் கந்தபுராணம் கூறும்:

"அன்னை தன்னை அகன்று அரன் யோகி போல்
என்னதுஞ் செயலின்றி இருந்தலான்
முன்னை ஆண் பெண் முயக்கமது இன்மையாய்
மன்னுயிர்த் தொகை மல்கல் இன்று ஆயதே"

என்பது கச்சியப்பர் கூற்று. அன்னையை இறைவர் மணந்தபின் உயிர்கள் துன்பம் நீங்கி இன்பம் உற்றன என்று கந்தபுராணம் மேலும் கூறுகிறது:

"... ஆதியம்பரமன் மாது
தன்புடையாகச் சீயத்தவிசின் வீற்றிருந்தலோடும்
துன்பகன்று இருபாலசித்து வன்றிய உயிர்கள் எல்லாம்
இன்பொடு போகம் ஆற்றி இனிது அமர் உற்றன அன்றே"

மேலும், கச்சியப்பர் திருக்கைலாயத்திலுள்ள அழகியவோர் மண்டபத்தில சிங்காசனத்தின்மேல் இறைவன் தன் அருட்சக்தியாகிய உமையுடன் வீற்றிருப்பதாகப் போற்றிப் பாடியுள்ளார்.

"சோதி சேரும் அத் தாணிமண்டபத்து
ஆதியான அரியணை உம்பரிற்
காதலாகும் கவுரியோர் பாங்குற
வேத நாயகன் வீற்றிருந்தான் அரோ"

'சில்பரத்தினம்' என்ற நூலின்படி சிவபெருமானின் சுகாசன மூர்த்தம் நான்கு கைகளைக் கொண்டிருக்கும். பின் வலக்கையில் மழுவும், பின் இடக்கையில் மானும் காணப்பட, முன்வலக்கை அபய முத்திரையிலும், முன் இடக்கை வரத முத்திரையிலும் இருக்க வேண்டும். இருக்கையில் அமர்ந்துள்ள இந்த வடிவின் இடக்கால் மடக்கி இருக்கை மீது இருக்க வலக்கால் தொங்கிய நிலையில் காணப்படும். அன்னையின் வலக்கால் மடங்கி இருக்கை மீது இருக்க, இடக்கால் தொங்கிய நிலையில் இருக்கும். அன்னை இரண்டு கைகளையுடையவளாக அண்ணலுக்கு இடப்பாகத்தில் உட்கார்ந்து அண்ணலை நோக்கியவாறு இருத்தல் வேண்டும். வலக்கையில் தாமரை மலரைத் தாங்கிக்கொண்டு இடக்கையை இருக்கைமீது நேராக வைத்த வண்ணம் இத்திருவுரு அமைதல் வேண்டும்.

திருக்கைலாய மலையில் இறைவன் அன்னையுடன் வீற்றிருப்பதாகப் போற்றப்படுவதால், திருக்கோயில்களில் கருவறைக்கு மேல் உள்ள விமானத்தில் கிழக்கு நோக்கி உமா சகித சுகாசன மூர்த்தத்தை அமைக்கும் மரபு பொதுவாகப் பின்பற்றப்படுகிறது. தமிழ்நாட்டின் பெருங்கோவிலாகிய தஞ்சைப் பெரிய கோவிலில் இவ்வாறே விமானத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் பல திருக்கோவில்களில் கருவறையில் இலிங்கத் திருவுருவிற்குப் பின்னால் உள்ள சுவரில் அன்னையுடன் கூடிய அண்ணலின் திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். எடுத்துக்காட்டாக அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்றும், அப்பர் பெருமானை ஆட்கொண்ட தலமுமாகிய திருவதிகை வீரட்டானேசுவரர் திருக்கோவிலிலும் திருமறைக்காடு எனப்படும் வேதாரண்யம் வேதாரண்யேஸ்வரர் கோவிலிலும் கருவறையில் இலிங்கத் திருவுருவத்திற்குப் பின்னால் உமா சகித சுகாசன மூர்த்தங்களைக் காணலாம்.

பல திருக்கோவில்களில் அன்னையுடன் கூடிய அண்ணலின் திருவுரு செப்புப் படிமங்களாகவும் காட்சி தருகின்றன.

(7ம் பக்கம் பார்க்க)

# மகேசுர வடிவங்கள்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

## இடபாரூரர் (விருஷபாரூட மூர்த்தி)

சிவபெருமான் உமையம்மையுடன் விடை (காளைமாடு) மீது உட்கார்ந்த வண்ணம் அல்லது விடைக்கு முன்னால் நின்ற வண்ணம் காட்சி தரும் திருவுரு விருஷபாரூட மூர்த்தி அல்லது விருஷப வாகன மூர்த்தி என அழைக்கப்படும். தமிழில் இடபாரூரர் என அழைக்கிறோம்

ஆகம விதிகளின்படி, சிவபெருமான் நின்ற நிலையில் வலக்கால ஊன்றி இருக்க, இடக்கால் சிறிது வளைந்து காணப்படும். இந்த நிலை திரிபங்கநிலை எனப்படும். முன் இடக்கை வளைந்து பின்னால் நிற்கும் காளையின் தலைமீது வைத்த நிலையிற் காணப்படும். முன் வலக்கையில் வக்ரதந்த ஆயுதம் என்ற படைக்கலம் இருக்கும். பின் வலக்கையில் மழுவும், பின் இடக்கையில் மானும் அமைந்திருக்கும். தலையில் சடாபாரம் அல்லது சடாமகுடம் அமையும். இடது பக்கத்தில் உள்ள இறைவியின் திருவுரு இறைவரைப் போன்று திரிபங்க நிலையில் அமைக்கப்பட்டிருக்கும். இறைவி வலக்கையில் நீலோற்பல மலரும் இடக்கை கத்ய வலம்பித முத்திரையிலும் காணப்படும். இருவருக்கும் பின்னால் காளை நிற்கும். ஆகமங்களில் இவ்வாறாக நின்ற நிலையே விரிவாக விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் சிற்பக்கலை வல்லுநர்கள் இவ்வாறு விடைமுன் நின்ற கோலத்திலுள்ள திருவுருவங்களை விருஷபாந்திகர் என அழைப்பர். விடைமீது அமர்ந்துள்ள வடிவங்களையே அவர்கள் விருஷபாரூடமூர்த்தி என அழைப்பர்.

திருமால் தான் இடப வடிவமெடுத்து சிவபெருமானைத் தாங்கி நிற்கிறார். இதனை ''மிகு பீடுடை மால் விடையான்'', ''செருமால் விடையூருஞ் செல்வன்'' என்ற திருஞானசம்பந்தப் பெருமானின் தேவார வரிகளாலும் ''போரார்ந்த மால்விடையொன்றூர்வான்'', ''செங்கண்மால் விடையார்'' என்னும் அப்பரடிகளின் தேவார அடிகளாலும் ''வெள்ளை மால் விடையாய்'', ''வேதமால் விடை ஏறவல்லானை'' என்ற சுந்தரர் வாக்குகளாலும் அறிந்து கொள்ளலாம்.

சிவபெருமான் முப்புரமெரிசெய்த போது திருமால் விடை வடிவாகச் சிவபெருமானைத் தாங்கி நின்றார் எனப் புராணங்கள் கூறும்.

மணிவாசகப் பெருமான் திருச்சாழலில்,

''தடமதில்கள் அவை மூன்றும்
தழல் எரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான்
திருமால் காண் சாழலோ''

என அருளிச் செய்துள்ளார்.

விடை அறக்கடவுளாகவும் கொள்ளப்படும. ஊழிக் காலத்து அறக்கடவுள் ''ஏறதாயொரு எழில் உரு''க் கொண்டு சிவபெருமானை அணுக அதனை அவர் ''பரிவொடு ஊர்தியாய் தாங்குதி யாரினுந் தலைமை பெற்றனாய்'' எனப் பரிவோடு தனது வாகனமாக ஏற்றுக் கொண்டதாகக் கந்தபுராணம கூறுகிறது. ''நீதியாய யோருடை விடையொன்றேற வல்லவர்'' என்பது அப்பர் திருவாக்கு.

''அடல்விடை'' எனத் திருமூலர் திருமந்திரம் அழைக்கிறது. இது பாவத்துடன் போரிடும் புண்ணிய ஏறு எனப் பொருள்படும். திருமுறைகளில் ''மழவிடை'' எனப் பல அருளாளர்களால் சுட்டப்படுகிறது. மழவு என்றால் இளமை எனப் பொருள். அறம் என்றும் இளமையாக இருப்பது; மூப்பினை ஒரு போதும் அடையாதது.

விடை என்றால் விடுதலை எனவும் பொருள்படும. அதாவது விருப்பு, வெறுப்புக்களிலிருந்து விடுதலை பெறுவது என்று பொருள். அடியார்களின் பாசத்தை நீக்கிப் பேரின்ப வெள்ளத்துள் திளைக்கச் செய்ய இறைவன் இடபாரூரராகக் காட்சி தருவர். இதனாலேயே மாணிக்கவாசக சுவாமிகள், ''இருள் மடிந்தருளிய இன்ப ஊர்தி'' என்கிறார். இறைவன் அடியவர்களுக்குக் காட்சி கொடுக்கும்போது உலகுய்ய அறநெறியையும வலியுறுத்த வேண்டியே அறக்கடவுளாகிய விடை மீது இவர்ந்து வருவர்.

இடபாரூரராக உமையம்மையுடன் சிவபெருமான் அடியவர்களுக்குக் காட்சி கொடுத்து அருள் புரிவதைத் தொண்டர் தம் பெருமையைப் பறை சாற்றும் பெரியபுராணத்தில் பரக்கக் காணலாம்.

சீர்காழிப் பிள்ளையார் தோணியப்பரை நோக்கி ''அம்மே! அப்பா!'' என்று அழுதபோது 'போனகம் வல்லியுந் தாமும் பொருவிடை மேல் எழுந்தருளி' ஞானப்பால் ஊட்டியதாகச் சேக்கிழார் கூறுகிறார். மாது சொன்ன சூளால் இளமை துறந்த திருநீலகண்ட நாயனார் முன் 'துன்னிய பெருவிருப்பினுந் துணையுடன் விடைமேற் கொண்டார்.' இல்லையே என்னாத இயற்பகை நாயனார் ''தன துணையுடன் வானிற்றலைவனை விடைமேற் கண்டார்.'' இளையான்குடிமாற நாயனார் முன் ''ஏலவார் குழலாள் தன்னோடு இடபவாகனனாய்த் தோன்றி'' இன்பமார்ந்திருக்க அருள செய்தான் மலைமலிந்த தோள் வள்ளல் மானக்கஞ்சாற நாயனாருக்கு ''பாங்கின் மலைவல்லியுடன் பழைய மழவிடையேறி'' வந்து அருள் செய்தார். தாதையைத் தாளற வீசிய சண்டிக்கு ''செறிந்த சடைநீள் முடியாருந் தேவியொடும் விடையேறி'' வெளிப்பட்டுச் சண்டீசப் பதவி நல்கினார்.

ஆனாய நாயனாரது குழலோசையைக் கேட்டு அருள் புரிய இறைவன் எழுந்தருளியதைக் கூறவந்த சேக்கிழார்,

''ஆனாயர் குழலோசை கேட்டருளி
அருட்கருணை
தாளாய திருவுள்ளம் உடையநவ
வல்லியுடன்
வானாதி காரணராம் கண்ணுத
லார் விடையுகைந்து
வானாறு வந்தணைந்தார் மதி
நாறுஞ் சடைதாழ''

எனப் போற்றுகிறார்.

ஆகவே ஒரு நாமம் ஓருருவம் அற்ற எம் அண்ணல், தம அடியார் தம்மாட்டுக் கொண்ட அன்பின் ஆழத்தை உலகினர்க்கு எடுத்துக் காட்டி, உலகோர் உய்யும் நெறியை உணர்த்த அவர்களை ஏற்றவாறு சோதிக்கிறான். அவ்வடியவர்கள் மனம் தளராது, நிலை குலையாது தாம் கொண்ட கொள்கையில் உறுதிபட நின்றொழுகும் போது இறைவன் தமது அருள் தரு திருமேனியைக் காட்டி ஆட்கொள்கிறான். அவ்வாறு ஆட்கொள்ளக் கொண்டருளும் அருள் வடிவங்களுள் அன்னையும் அறத்தையும் எடுத்துக் காட்டும் அன்னையுடன் விடைமேற் காட்சி தரும் மூர்த்தம் மிகச் சிறப்பு வாய்ந்தது.

(அடுத்த இதழில் தொடரும்)

உ



திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

**இந்துசாதனம்**

விஷு ஸ்ரீ பங்குனி மீ 14 உ (28-03-2002)

# தர்ம சிந்தனை

பொருள் வலிமையும் அதிகார வலிமையும் இல்லாதவர்களாலும் மக்கள் பணி ஆற்ற முடியும் என்ற உணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் முயற்சிகளிலும், பொதுப் பணிகளில் எல்லா மக்களுமே பங்கு பற்ற முடியும் - பங்குபற்ற வேண்டும் - என்ற எண்ணத்தை மக்கள் மனதில் பதியச் செய்யும் பிரசாரத்திலும், இக்காலத்தில் யாரும் அதிக கவனஞ் செலுத்துவதாகக் கூறமுடியாதுள்ளது.

அரசாங்க நிதியைக் கையாளும் அதிகாரமுள்ள அரசியல்வாதிகளையும் அதிகாரிகளையும் கொண்டும், நிதி வலுமிக்க வெளிநாட்டு நிறுவனங்களிடம் கையேந்தியும், வெளிநாட்டில் புலம்பெயர்ந்து வாழும் எம்மின மக்களிடம் வசூலித்தும்தான் பொதுப் பணிகள் செய்யலாம் என்ற எண்ணம் பெரும்பாலானவர்கள் மனதில் வேரூன்றி வருவதைக் காண்கிறோம். இது ஆரோக்கியமானதொரு நிலையல்ல. இதனால் மக்கள் மனதில் தரும சிந்தனை அருகி வருகிறது.

தர்மத்திற்குப் பொருள் கொடுக்கும் பண வலிமை படைத்தோர் அனைவரும் தர்ம சிந்தனையுள்ளவர்கள் என்று கூறுவதற்கில்லை. சிலர் நிர்ப்பந்தத்தின் பேரிலும், சிலர் பேருக்கும் புகழுக்குமாகவே பொதுப் பணிகளுக்கு ஈகின்றனர். மக்கள் சேவைக்கு எவ்வளவு கொடுக்கப்படுகிறது என்பதைவிட, கொடுக்க வேண்டும் என்ற தர்மசிந்தனை ஏற்படுவதே முக்கியம். அச்சிந்தனை பொருள் வசதி படைத்தோர், படையாதோர், அதிகாரம் உடையோர், இல்லாதோர் என்ற வேறுபாடின்றி எல்லோர் மனத்திலும் விதைக்கப்பட வேண்டும்.

''யாவர்க்குமாம் உண்ணும் போது ஒரு கைப்பிடி'' என்பது திருமூலர் வாக்கு. நாம் உண்ணும் போது, ஒரு கவளத்தை மட்டுமாவது பசித்திருப்பாருக்கு வழங்குவது முடியாத காரியமல்ல. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பழக்கம் நல்லதுதான். ஆனால் இது இன்று நடைமுறைச் சாத்தியமா என்ற வினா எழுகிறது. காரணம் பசிக்கிறது என வருபவர்களில் பலர் தீய நோக்கம் உடையவர்களாக அல்லது சோம்பேறிகளாக இருக்கக் காண்கிறோம். மேலும் பசித்தோரைத் தேடிக் கண்டுபிடிக்க அநேகருக்கு நேர அவகாசம் இல்லை. இதற்கும் நம் பெரியோர்கள் ஒரு வழி காட்டியுள்ளார்கள்.

ஒவ்வொரு வீட்டிலும் உணவு சமைக்கும்போது தினமும் ஒருபிடி அரிசியை பாத்திரமொன்றில் போட்டு வைப்பார்கள். இறுதியில் அதை ஆதுலசாலை (ஏழை எளியோருக்கு அன்னமிடும் சாலை)களுக்குக் கொடுப்பார்கள். பெரிய காணி, பூமி உள்ளவர்கள் குறிப்பிட்ட தொகைத் தென்னைமரங்களில் இருந்து கிடைக்கும் பிரயோசனம் முழுவதும் இன்ன தருமப் பணிக்கென ஒதுக்கி விடுவார்கள். நெல் வயல்களின் உரிமையாளர்கள் தங்கள் வயல் வேளாண்மையில் ஒரு வரி வைத்து அதைத் தருமப் பணிக்கு உதவினார்கள். அதிக வசதியும் மனமும் படைத்தோர் தமது செலவிலேயே பாடசாலைகள், பொதுக்கிணறு, சத்திரம், மடம் போன்றவற்றை அமைத்து உதவினர்.

நாவலர் பெருமான் முதற் சைவப் பாடசாலையை ஆரம்பித்தபோது அப்பாடசாலையை நடத்தப் பிடி அரிசித் திட்டம் உதவிற்று. நாவலர் வழியிற் பணியாற்ற எழுந்த சைவபரிபாலனசபை கல்வி, சமய, சமூகப் பணியாற்ற ஆரம்பித்த காலகட்டத்தில், சபைப் பணிகளுக்காகச் சில தென்னை மரங்களின் பிரயோசனங்களைக் கொடுத்தல், வேளாண்மை வருவாயின் ஒரு பகுதியைக் கொடுத்தல், போன்றவற்றோடு சைவசமயிகள் தமது வீட்டில் நடைபெறும் வித்தியாரம்பம், விவாகம், புத்திரப் பேறு, புதுமனைப் பிரவேசம், சமய தீட்சை, ஆச்சாரியாபிஷேகம், அந்தியேட்டி, சிராத்தம் போன்ற கருமங்களின் போதெல்லாம் சைவபரிபாலன சபைப் பணிகளுக்கென ஒரு தொகைப் பணம் உபகரித்து வந்தனர். இந்த விபரங்களைப் பழைய இந்து சாதனப் பத்திரிகைகளிலும் இப்போ வெளிவந்து கொண்டிருக்கும சைவபரிபாலன சபையின் தோற்றமும் வளர்ச்சியும் பணிகளும் பற்றிய இந்து சாதன தொடர் கட்டுரைகளிலும் காணலாம். இப்படியான நடைமுறைகளால் பெருந்தொகைப் பணம் சேராவிட்டாலும் மக்கள் மத்தியில் தர்ம சிந்தனை ஏற்பட இவ்வாறான செயற்பாடுகள் பெரிதும் உதவிற்று என்பது மனங் கொள்ளப்பட வேண்டியது.

மேற் சுட்டிக்காட்டப்பட்ட பழக்கங்கள் அற்றுப் போனது கவலைக்குரியது இன்று இயங்கும் தர்ம ஸ்தாபனங்கள், பெருந்தொகையான நன்கொடைகளைப் பெற்றுக் கொள்வதில் - சிறப்பாகப் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்களிடம் பெற்றுக் கொள்வதில்-தான் அக்கறையாக இருக்கின்றன. வேறு விதமாகக் கூறுவதாயின் இவை வெளியூர் வாசிகளைத் தர்ம சிந்தனை உள்ளவர்களாக்கவே பெரிதும் உதவுகின்றன. ஆனால் உள்ளூர் வாசிகளைத் தர்ம சிந்தனையுடையவர்களாக வாழ ஊக்குவிப்பதில் நாட்டம் காட்டுவதில்லை. இது ஆரோக்கியமான அணுகுமுறையல்ல.

உள்ளூர் வாசிகளும் - சிறப்பாகப் பொருளாதார வலுக் குறைந்தவர்களும் - இம்மண்ணில் நடைபெறும் தருமப் பணிகளில் தாமும் பங்குபற்றுகிறோம் என்ற மனவுணர்வு ஏற்படக்கூடிய முறையில் தர்ம ஸ்தாபனங்கள் நடந்து கொள்வது விரும்பத்தக்கது. அதனால் கிடைக்கும் வரவு சிறிதாகவிருப்பினும், அது மக்கள் மனதில் நல்ல சிந்தனைகளை - தரும சிந்தனையை - பெரிதும் ஏற்படுத்தும்.

ஒவ்வொரு வீட்டிலும், வீட்டின் தலைமகன் காலை வழிபாடுகள் முடிந்து தன் நாளாந்த சீவனோபாயக் கடமைகளுக்குச் செல்ல முன், - ஒரு ரூபாவோ, இரண்டு ரூபாவோ, ஐந்து ரூபாவோ, பத்து ரூபாவோ, தன்பொருளாதாரநிலைக்கு ஏற்ப - தன் வீட்டு வழிபாட்டறையில் வைக்கப்படும் உண்டியலில் தருமப் பணிக்கென இடும் வழக்கமொன்றைப் பிரபல்யப்படுத்த சமயப் பிரசாரகர்களும் சமூக நலனில் அக்கறையுள்ளவர்களும் முன்வர வேண்டும்.

வாசக நேயர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

## பல்கலைக்கழகக் கௌரவம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 16 03-2002ஆம் நாள் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் தமிழ் எழுத்தாளரும் பேச்சாளரும் ஆகிய வித்துவான் கந்தசாமிச்செட்டி சொக்கலிங்கம் (சொக்கன்) அவர்கள் கௌரவ கலாநிதிப் பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டார்.

பல பாடசாலைகளில் ஆசிரியப்பணி புரிந்த திரு. சொக்கன் அவர்கள் பலாலி, கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளில் விரிவுரையாளராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வருகை விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். நீண்டகாலமாகக் கல்வி அமைச்சின் பாடவிதானக் குழுவில் அங்கத்தவராகக் கடமையாற்றியுள்ளார்

திரு. சொக்கன் அவர்களது தமிழ்ப்புலமை பலதுறை சார்ந்தது. இலக்கணம், இலக்கியம், சிறுகதை, கவிதை, நாடகம், வாழ்க்கைச் சரிதம், கட்டுரையாக்கம் போன்ற பல்வேறு துறைகளில் தமது திறமையை வெளிக்காட்டியுள்ளார்.

திரு. சொக்கனது தமிழ்ப்புலமை, சைவசமய விளக்கம் காரணமாக 'இலக்கியச் செம்மல்', 'தமிழ்மாமணி', 'செந்தமிழ் வித்தகர்', 'குகஸ்ரீ' போன்ற பட்டங்கள் அவரை வந்தடைந்தன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கௌரவம் இவற்றிற்கு மகுடம் வைத்தாற்போல் அமைந்துள்ளது.

எழுபத்திரண்டாவது அகவையை அண்மிக்கும் திரு சொக்கன் அவர்கள் உடல் நலத்துடன் மேலும் பல ஆண்டுகள் வாழ்ந்து தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டாற்றப் பிரார்த்திக்கிறோம்.

## வையகம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சீர் செய்யப்படவேண்டும். பாடசாலைக்கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு எல்லாப் பாடசாலைகளும் அவை முன்னர் இயங்கிய இடங்களிலேயே இயங்க வைக்கப்பட வேண்டும். மக்கள் தமது வீடுகளைப் புரைமைக்கவும் அழிந்த வான் பயிர்களை மீள உருவாக்கித் தமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் உதவிகள் வழங்கப்பட வேண்டும். இவையும் இவை போன்ற நடவடிக்கைகளுமே தமிழர் பிரதேசத்தில் இயல்பு நிலையை ஏற்படுத்தும். இவற்றையே மக்கள் எதிபர்ார்க்கின்றனர்.

மக்கள் எதிர்பார்ப்பு இவ்வாறாக, யாழ்ப்பாணக் குடாநாட்டைத் தமது உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் இடமாக்கலாம் என்ற வர்த்தக நோக்கோடு பெருந்தொகையானோர் தெற்கிலிருந்து குடாநாட்டை நோக்கிப் படையெடுப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள்தான் இயல்பு நிலையின் வெளித்தோற்றம் எனச் சில வட்டாரங்கள் கருதுவதையிட்டு மக்கள் விசனமுற்றிருப்பதை அவதானிக்க முடிகிறது. பொது மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதாகச் சம்பந்தப்பட்டவர்களின் செயற்பாடுகள் புத்தாண்டில் அமைதல் வேண்டும்.

தமிழர் பிரதேசம் இயல்புநிலைக்குத் திரும்புவதுடன் இனப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் தீவிரமடையுமென மக்கள் நம்புகின்றனர். புரையோடிப் போன இந்தப் பிரச்சனைக்குத் தீர்வொன்றைக் காணுவது சுலபமான விடயமல்ல என்பதை மக்கள் நன்கு உணர்ந்துள்ளபோதிலும் நம்பிக்கையுடன் புத்தாண்டை எதிர்நோக்குகின்றனர். சம்பந்தப்பட்ட இரு பகுதியினரும் புரிந்துணர்வுடனும் விட்டுக்கொடுக்கும் மனப்போக்குடனும் செயற்பட்டு மக்களை மீண்டும் போர் அரக்கனின் பிடிக்குள் சிக்கவைக்காது அவதானத்துடன் நடந்து சமாதானத்துக்குக் கிடைத்துள்ள இறுதிச் சந்தர்ப்பத்தைப் புத்தாண்டில் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வர் என மக்கள் எதிர்பார்க்கின்றனர் - நம்புகின்றனர்.

புத்தாண்டு தினத்தன்று சர்க்கரையையும் வேப்பிலையையும் சேர்த்துத் தாமும் உண்டு விருந்தினர்க்கும் கொடுக்கும் வழமை தமிழ்நாட்டில் உண்டு.

இது புத்தாண்டில் இனிப்பான காரியங்களுக்கும் கசப்பான விடயங்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதை உணர்த்த எழுந்த மரபு. ஆகவே மக்களும் சரி, சமாதான முயற்சிகளில் ஈடுபடும் இரு பகுதியினரும் சரி பல இனிப்பான, கசப்பான அனுபவங்களுக்கூடாகச் சென்று தான் நிரந்தர சமாதானமென்ற இலக்கை அடையவேண்டியிருக்கும். அதற்கு இறைவன் வழி காட்டுவாராக.

புத்தாண்டில் வையகம் துயர் தீர்ந்து சகல சீவராசிகளும் மண்ணில் நலல வண்ணம் வாழந்து மகிழ்வுற வேண்டுமெனப் பிரார்த்திப்போமாக.

உ

## சைவசமயப் பெருநாட்கள்

### (பங்குனிப் பூரணை முதல் சித்திரைப் பூரணை வரை)

| | | | | |
|---|---|---|---|---|
| பங்குனி | 14 உ | (28-03-2002) | வியாழன் | பூரணை விரதம், பங்குனி உத்தரம் |
| | 18 உ | (01-04-2002) | திங்கள் | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| | 27 உ | (10-04-2002) | புதன் | பிரதோஷ விரதம் |
| | 29 உ | (12-04-2002) | வெள்ளி | அமாவாசை விரதம் |
| | 30 உ | (13-04-2002) | சனி | செல்லப்பா சுவாமிகள் குருபூசை |
| சித்திரை | 01 உ | (14-04-2002) | ஞாயிறு | சித்திரபானு வருடப்பிறப்பு |
| | 02 உ | (15-04-2002) | திங்கள் | கார்த்திகை விரதம் |
| | 03 உ | (16-04-2002) | செவ்வாய் | சதுர்த்தி விரதம் |
| | 05 உ | (18-04-2002) | வியாழன் | ஷஷ்டி விரதம் |
| | 11 உ | (24-04-2002) | புதன் | பிரதோஷ விரதம் |
| | 13 உ | (26-04-2002) | வெள்ளி | சித்திரைச் சித்திரை, சித்திரா பூரணை சித்திரகுப்த விரதம் |

# சைவப்பெரியார் புலோலியூர் சிவபாதசுந்தரனார்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கிறிஸ்தவன், சோனகன் முன்வரவில்லை. சைவர் என்றிருக்கும் ஒரு சிலர் மட்டும் ஏன் முன்வருவான்?

பாரததேசம் ஆங்கிலேயரின் அடிமைத்தளையில் இருந்தபோது, அக்கட்டைத் தகர்த்தெறிய ஒரு சில தேசாபிமானிகள் முன்வந்தார்கள். எல்லாச் சமயத்தாரும் எல்லாச் சாதியாரும், ஒன்று திரண்டாற்றான் இது கைகூடும் என்ற நம்பிக்கை அவர்களுக்குப் பிறந்தது. சமயத் தலைவர்களெல்லாம் தம் தம் சமயமே பெரிதென்று வாதாடினர். இச்சமயவாதம் சுதந்திரப்போருக்கு முட்டுக் கட்டையாக இருப்பதை அறிந்து பலபெயரால் வணங்கப்படும் தெய்வம் ஒன்றுதான், எல்லாச் சமயங்களும் அதே கடவுளுக்குப் போகும் பல வழிகள் என்று 'ஒற்றுமை' போதிக்கத் தொடங்கினர்.

அவர்களுடைய நோக்கம் மிகவும் மேன்மையானது. ஆனால் கையாண்ட வழியோ வருந்தத்தக்கது. இச்சமயங்கள் கூறும் உண்மைப் பொருள்கள், ஆசாரங்கள் எல்லாம் வேறுபட்டவை. உலகநீதி போதிப்பதில் ஒத்திருக்கலாம். ஆனால் தத்துவஞானம் அளவில் வேறுபட்டவையே. இவற்றை ஒன்றென்று கூறுவது அச்சமயஞானிகளையே பரிகாசம் செய்வதாகும். எவ்வாறு ஒவ்வொரு அரசியற் கட்சிகளும் தங்கள் தங்கள் கொள்கைகளை எடுத்துக் கூறுவதற்கு உரிமையுண்டோ அதே போல உரிமைதான் சமயத்திற்குமுண்டு. அதனை மழுக்கப்பார்ப்பது உண்மைக்கும் நீதிக்கும் விரோதமாகும். மக்களிடையே சமயப்பற்று இருப்பதையறிந்து அதனைத் தம் அரசியற் செல்வாக்கிற்காக உபயோகப்படுத்தாவிட்டால் சமயம் அரசியலில் புகாது; அரசியலும் சமயத்திற் புகாது.

அரசியல்வாதிகள் போதித்த இந்தச் சமய ஒற்றுமையைச் சிலர் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டனர். போதிக்கவும் தொடங்கினர். சிலர் மறுசமயத்தவரின் ஆதரவையும் புகழையும் பெறுவதற்காக ஒற்றுமைப் பல்லவி பாடினர். ……… ……… (பெயர் மறைக்கப்பட்டுள்ளது) இவ்வகுப்பைச் சேர்ந்தவர், கற்றவர், பெரியவர், முதியவர். ஆனால், சைவம் கூறாத சமரசக்கொள்கையைப் பறைசாற்றுவதால் சைவ சமயத்தைப் பற்றிக் கூறுவதற்கு அருகர் அல்லர். அக்கொள்கையை அவர் தாராளமாக எடுத்துச் சொல்லலாம். ஆனால் சைவசமயக் கொள்கையாக அதனைச்சாதிப்பதுதான் பெரும் பாதகமாகும். தன்கொள்கையைப் பரப்புவதற்குப் புனிதமான சைவசமயப் போர்வையைப் போடுதல் கூடாது. இதனைத் தான் பிள்ளையவர்கள் பலமாகக் கண்டித்தார். இவ்விடயத்தைப் பற்றி வளர்ந்த காகிதம் பின்வருமாறு

''அப்பர் சுவாமிகள் ''நாமார்க்கும் குடியல்லோம்'' என்று எல்லை வைத்த சைவனின் மகிமையை நீ பாதுகாக்க வேண்டும். எல்லாச் சமயங்களும் சமமானவை என்று போதித்த கூட்டத்திற்கு நீ போனதே பெரும் பிழையாகும். அப்படிப்பட்ட மனிதன் சைவத்துரோகியாகும். அரசியற் சேவையில் உதவிபுரிந்தமையால் இந்திய அரசியல்வாதிகள் அவரை மதிக்கின்றனர். அவர் புலமையும் அவ்வாறே அரசியற்கு உதவி புரிந்தது. எங்களிடையே தோன்றிய சிவசம்புப்புலவர் முதலியோர் ……… ……… ……… (பெயர் மறைக்கப்பட்டுள்ளது) இலும் பார்க்கச் சிறந்தவர்கள். யாழ்ப்பாணத்திலே தோன்றிய புலவர்களுக்கு மரியாதை செலுத்திய பின்பே யாழ்ப்பாணத்தவர் மற்றவர்களுக்கு வணக்கம் செலுத்தவேண்டும். ஆகம வழிவரும் சைவனையே மதி''

சைவப்பெரியார் அவர்கள் வேத சிவாகமங்களே சைவசமய முதல் நூல்கள் என்றும் சைவத் தெய்வத் திருமுறைகள் அவற்றின் வழியாக வந்தன என்றும் சம்ஸ்கிருதம் பாரத நாடு முழுவதற்குமுரிய தெய்வமொழி என்றும் நம்பினார். சமஸ்கிருதம் பிராமணருடைய மொழியென்றும் சைவசமய முதனூல்கள் தமிழிலே இருந்தன என்றும் கூறி தனித்தமிழ் இயக்கமொன்றை மறைமலை அடிகள், திரு. கா. சுப்பிரமணியபிள்ளை போன்றோர் ஆரம்பித்தார்கள். தனித்தமிழ்க் கொள்கையைக் கண்டித்து 1925ஆம் ஆண்டளவில் சைவப்பெரியார்கள் திரு. சே. வெ. ஜம்புலிங்கம் பிள்ளை, C. K. சுப்பிரமணிய முதலியார், அச்சுவேலி குமாரசாமிக் குருக்கள், சு. சிவபாதசுந்தரம்பிள்ளை ஆகியோருடைய கட்டுரைகளைத் தாங்கிய ''திருநான்மறை ஆராய்ச்சி'' என்னும் நூல் வெளிவந்தது. சைவப்பெரியார் சிவபாதசுந்தரனாரின் கட்டுரை பல ஆதாரங்களைக் கொண்டதாயமைந்திருந்தது.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினர், 1946ஆம் ஆண்டளவில், தாம் நடத்தும் சைவ மாநாடொன்றிற்குத் தலைவராக மறைமலையடிகளுடைய மாணவன் இளஅழகனார் என்பவரைத் தலைவராக அழைப்பதற்குத் தீர்மானஞ் செய்தனர். அவரும் சபையாரது அழைப்பை ஏற்றுக்கொண்டபின், போக்குவரத்துக்குரிய பணமும் அனுப்பப்பட்டது. அப்போது சைவ பரிபாலனசபையின் சமயப்பிரசார அமைச்சர் அமரர் திரு. மு. மயில்வாகனம், திரு. க. சி. குலரத்தினம், திரு. வ. கார்த்திகேசு ஆகியோர் கந்தவனக்கடவை சென்று சைவப்பெரியாரை சந்தித்து இந்த ஒழுங்கைத் தெரிவித்தனர். அப்பொழுது சைவப்பெரியார் கூறினார்: ''இந்தியாவில் இருந்து அம்மைநோய் முதலியன இலங்கையில் பரவுவதைத் தடுப்பதற்குச் சட்டங்கள் இருக்கின்றன. தனித்தமிழ்க் கொள்கை இலங்கையில் புகுவதைத் தடுப்பதற்கு ஒரு சட்டமும் இல்லை'' இவ்வாறு கூறிக் கவலைப்பட்ட சைவப்பெரியார் இளஅழகனாரை அழைக்க வேண்டாமென்று ஆலோசனை கூறினார். காணச் சென்றவர்கள், பிரயாணத்துக்குரிய பணத்தை அனுப்பிவிட்டோம்' என்று கூறினர். 'பணம் போனாலும் பரவாயில்லை, அவரை அழைக்க வேண்டாம்' என்று சைவப்பெரியார் பதிலிறுத்தார். அவருடைய நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்ட சைவபரிபாலனசபையினர் இளஅழகனை அழைப்பதை நிறுத்திவிட்டனர்.

(அடுத்த இதழில் தொடரும்)


சைவபரிபாலன சபை - யாழ்ப்பாணம்

## நூலகம்

சபையின் 66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டப நூலகம் திங்கள், செவ்வாய், புதன், சனி, ஞாயிறு தினங்களில்
மு. ப 9-00 மணி தொடக்கம் நண்பகல் 12-00 மணி வரையும்
பி. ப 1-30 மணி முதல் பி. ப. 4-30 மணி வரையும் திறந்திருக்கும்.

சைவசித்தாந்த பண்டிதர் தேர்வு, சைவப்புலவர் தேர்வுக்குத் தோற்றவிருப்போரும் ஏனையோரும் நூலகத்தைப் பயன்படுத்தலாம்.

உ

# சைவநெறித் தேர்வு - தரம் 13

## இந்து நாகரிகம் — I

## வினாக்களும் விடைகளும்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் 2002 ஆம் ஆண்டு நடத்திய தரம் 13க்கான சைவநெறித் தேர்வின் இந்துநாகரிகம் I வினாத்தாள் கீழே தரப்பட்டுள்ளது. மாதிரி விடைகள் பன்னிரண்டாம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன. இந்துநாகரிகம் II வினாத்தாளும் விடைகளும் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

''அ'' பகுதியிலுள்ள முதலாம் வினாவுக்கும் ''ஆ'' பகுதியிலுள்ள ஏவையேனும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதப்படவேண்டும். தரப்படும் நேரம் மூன்று மணித்தியாலங்கள்.

### பகுதி "அ"

1. மேல்வரும் ஐந்து வினாக்களிலுமுள்ள பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1. வேதகாலத்தில் மண்ணைச் சார்ந்த தெய்வங்கள் அடங்கும் தொகுதி
   1) பிருதுவி, அக்கினி, பிரகஸ்பதி, சோமன்
   2) அக்கினி, உஷா, வாயு, அப்பு
   3) பிருதுவி, இந்திரன், சோமன், விஸ்ணு
   4) வர்ணன், அக்கினி, இந்திரன் சூரியன்
   5) உருத்திரன், பிருதுவி, அக்கினி, சோமன்

2. அறுவகைச் சமய நெறிகளை விளக்கும் புராணம்
   1) அக்கினி புராணம்
   2) நாரதபுராணம்
   3) விநாயக புராணம்
   4) மச்சய புராணம்
   5) பத்மபுராணம்

3. பாறைகளைக் குடைந்து கோயில் அமைத்த மன்னன்
   1) 1ம் ராஜராஜன்
   2) 1ம் குலோத்துங்கன்
   3) பார்தக சோழன்
   4) மகேந்திரவர்மன்
   5) கங்கை கொண்ட சோழன்

4. உபாகமங்கள் அடங்கும் தொகுதி
   1) புராணம், நியாயம், சூக்குமம், தூபம்
   2) ஸ்மிருதி, மனம், புராணம், மீமாஞ்சை
   3) புராணம், ஸ்மிருதி மீமாஞ்சை நியாயம
   4) உபநிடதம், வேதம், புராணம், நியாயம்
   5) ஆரணியம், பிரமசூத்திரம், மீமாஞ்சை, ஸ்மிருதி

5. மீராபாயின் சமகாலத்தில் வாழ்ந்த பக்திநெறியாளர்கள்
   1) ரவிதாசர், ஸ்ரீசைதன்யர், துளசிதாசர்
   2) மீராபாய், இராமதாசர், ஆண்டாள்
   3) கபீர்தாசர், துளசிதாசர், சூர்தாசர்
   4) இராமதாசர், குருநானக், மீராபாய்
   5) இராமதாசர், ரவிதாசர், ஜெயதேவர்

இல 6 முதல் 10 வரையிலான வினாக்களிலுள்ள வாக்கியங்கள் சரியாயின் ''√'' எனவும் பிழையாயின் ''×'' எனவும் அடையாளமிடுக

6. குப்தர்கால சிற்ப வளர்ச்சிக்கு இராம அவதாரம் பெரிதும் துணை புரிந்தது ( )
7. முருகனின் ஆறாவது முகம் அதோமுகம் எனப்படும் ( )
8. சிரவணம் என்பது சிந்தித்தல் ஆகும் ( )
9. இல்லற வாழ்வின் நாளாந்த கடமைகளை விளக்கும் நூல் கிருஹய சூத்திரம் ( )
10. தட்சிண சித்திரம் எனும் ஓவிய நூலுக்கு உரை எழுதியவர் மகேந்திர வர்மன் ( )

இல 11 முதல் 15 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

11. பஞ்ச ஆசனங்களும் எவை?
12. நான்கு வர்ணங்களின் கடமைகளைச் சிறப்பாகக் கூறும் நூல் எது?
13. தன்குருவைப் போற்றிப் பாடிய ஆழ்வார் யார்?
14. ஆகந்துக மலங்கள் எவை?
15. பாண்டியர் அமைத்த கோயில் காணப்படும் இடங்கள் எவை?

இல 16 முதல் 20 வரையிலான வினாக்களில் உள்ள வசனங்களில் வரும் இடைவெளிகளைப் பொருத்தமான சொற்களால் நிரப்புக.

16. நாயக்கர் காலத்தில் சமய சேவைகளை ............................................ வளர்த்து வந்தன.
17. சிவனின் அதியுத்தர் வடிவம் என்பது ............................................ ஆகும்
18. ............................................என்பவர் கீத கோவிந்தம் பாடியவர் ஆவார்.
19. வைணவத்தின் முதல் நூல்கள் ............................................ ஆகும்
20. யாழ்ப்பாணச் சமயநிலை என்னும் துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டவர் ............................................ ஆவார்.

(12ம் பக்கம் பார்க்க)

# சைவநெறித்தேர்வு - தரம் 13

பகுதி "ஆ"

(11ம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாம் வினா தொடக்கம் பத்தாம் வினா வரையிலான வினாக்கள் விருப்பத்திற்குரியவை. அவற்றுள் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

2. குப்தர் காலத்திலே (அ) இந்து சமயம் அடைந்த வளர்ச்சியினையும் அவ்வளர்ச்சி (ஆ) இலக்கியம் (இ) கலை (ஈ) அரசியல் ஆகிய துறைகளில் ஏற்படுத்திய செல்வாக்கினையும் விளக்குக.

3. மேல் வருவனவற்றின் அடிப்படையில் கௌமாரத்தின் அம்சங்களை விளக்குக.
   அ) தோற்றமும் அதன் வளர்ச்சியும்
   ஆ) வழிபாட்டு முறைகள்
   இ) அவை சுட்டும் தத்துவங்கள்

4. விஜய நகர நாயக்கர் காலத்து இந்துக்களின் வாழ்க்கையில் அ) வீரசைவம் ஆ) ஆதீனங்கள் இ) கோயில்கள் பெற்றிருந்த இடத்தினை விளக்குக.

5. மேல்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு சங்கரரின் சாதனைகளை மதிப்பிடுக.
   அ) ஆற்றிய பணிகள்
   ஆ) தத்துவக் கோட்பாடுகள்
   இ) சமய நிறுவனங்கள்

6. ஆறுமுக நாவலர் சைவசமய வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டுகளை மேல்வரும் அடிப்படையில் மதிப்பிடுக
   அ) மெய்ச்சமயம் என்பதை சைவசமயிகளுக்கு உணர்த்தல்
   ஆ) சைவசமயத்தைப் பேணுகைக் குறிக்கோள்
   இ) பிரசங்கம் ஈ) பிரசுரம்
   உ) சமயப் பாதுகாவலர் விருது பெறல்
   ஊ) ஐந்தாம் குரவர்

7. தென்கிழக்காசியாவில் யாவா தேசத்தின் இந்துப் பண்பாட்டு அம்சங்களை விளக்குக?

8. அ) ராஜாராம் மோகன் ராய் ஏற்படுத்திய சாதனைகளை மதிப்பிடுக?
   ஆ) இந்து சமுதாயத்தில் அவற்றால் ஏற்பட்ட செல்வாக்கு யாது?

9. பண்பாடு பற்றி மேல்வரும் அம்சங்களைக் கொண்டு விளக்குக.
   1) கோயில்கள் 2) வெண்கலப் படிமம்
   3) கட்டிடக்கலை 4) சிற்பக்கலை
   5) அரச ஆதரவு

10. மேல் வருவனவற்றுள் எவையேனும் நான்கினைப் பற்றிச் சுருக்கமான குறிப்பு எழுதுக.
   அ) கந்தபுராணம் ஆ) சிறீரங்கம் இ) கதிர்காமம்
   ஈ) மகாபாரதம் பிரதிபலிக்கும் ஒழுக்க நெறி
   உ) ஆகமங்கள்
   ஊ) வேதங்கள் கூறும் மனித நேயம்

# சைவநெறித் தேர்வு - தரம் 13

## இந்துநாகரிகம் - I

## மாதிரி விடைகள்

பக்கம் 11, 12 இல் தரப்பட்ட வினாத்தாளுக்கான மாதிரி விடைகள் கீழே தரப்படுகின்றன.

பகுதி "அ"

1. 1) 1 2) 5 3) 4 4) 3 5) 3
   6) (×) 7) (√) 8) (×) 9) (√) 10) (√)
   11) ஆனந்தாசனம், சிம்மாசனம், யோகாசனம், பத்மாசனம், மயூராசனம்
   12) மனுதர்மசாஸ்திரம்
   13) மதுரகவி ஆழ்வார்
   14) கன்மம், மாயை
   15) குன்றக்குடி, குடுமியாமலை, பத்மாசனம்
   16) மடங்களும் ஆதீனங்களும்
   17) சிவலிங்கம்
   18) ஜெயதேவர்
   19) பஞ்சராத்திரம், வைகாசனம்
   20) ஆறுமுகநாவலர்

பகுதி "ஆ"

2. காலம் - கி.பி. 320-550
   அ) இந்து கலாசார எழுச்சியை அடிப்படையாகக் கொண்ட புதிய யுகம் தோன்றியது.
      கலாச்சார எழுச்சி
      இந்துசமயம், கலாசாரம் குப்தர் காலத்தை ஆதாரமாகக் கொண்டவை.
      சமய சிந்தனை, இலக்கியம், நுண்கலை ஆகியவற்றின் வளர்ச்சி
      சைவ, வைணவ சமயச் சிறப்பு
      இந்துக் கலாசாரமும், வழிபாட்டு முறையும் விருத்தி
      அரச முத்திரையில் சமய சிந்தனை பொறிக்கப்படல்
      ஆலய வழிபாடு வளர்ந்தது.
      ஆகம மரபு உருவாக்கப்பட்டது
      சூரிய வழிபாடு வளர்ந்தது

(13ம் பக்கம் பார்க்க)

# சைவநெறித் தேர்வு - தரம் 13

## மாதிரி விடைகள்

(12 ம் பக்கத் தொடர்ச்சி)

ஆ) இலக்கியம்

இலக்கிய வரலாற்றில் உச்சக்கட்டம்
மகாபாரதம், இராமாயணம் இறுதி வடிவம் பெற்றன.
அறுவகைத் தரிசனங்களின் சிறுநூல்களும் விருத்தி உரைகளும் எழுந்தன.
விஷ்ணு ஸ்மிருதி, நாரதஸ்மிருதி எழுதப்பட்டன.
காமாந்தக நீதிசாரம், வாயுபுராணம், மச்சய புராணம் தோன்றின.
நாடக இலக்கிய வளர்ச்சி
நாடகங்களும் காவியங்களும் தோன்றின

இ) கலை

சிற்பக் கலையின் உதய காலம்
கோயில்கள் பலவித அமைப்பைக் கொண்டவையாகக் காணப்பட்டன.
குப்தர் கலைப் பாணியை மையமாக வைத்து சிற்ப சாத்திரங்கள் கோயில்களை வகைப்படுத்தின.
சிற்பங்கள் உருவாக்கப்பட்டன.

ஈ) அரசியல்

அரசியல் சிறப்பு வாய்ந்த காலம்
மன்னர்கள் 2ம் சந்திரகுப்தன், குமாரகுப்தன், ஸ்காந்தகுப்தன் இவர்களின் ஆட்சி நிலை பற்றி விளக்கல்.

(20 புள்ளிகள்)

3. அ) தோற்றமும் வளர்ச்சியும்

அறுவகைச் சமயங்களில் ஒன்று
சிந்துவெளி
வேத இலக்கியங்களில் பிராமணிய குறிப்புக்கள்
பிராமணங்களில் முருகன்
புராணக்கதைகளில்
குசாணர் ஜெயதேவர்
குப்தர் கால முருக வழிபாடு
தக்கணத்தில் முருக வழிபாடு
சங்ககாலம் தொடக்கம் நாயக்கர் காலம் வரையான முருக வழிபாட்டை விளக்கல்
ஆகம நெறியிலும் ஆகமம் சாரா நெறியிலும் முருக வழிபாட்டை விளக்கல்

ஆ) வழிபாட்டு முறைகள்

காவடி
விரதம்
கடம்ப மாலையைத் தூக்கிவிடுதல்
சேவல் மயில் நேர்த்தி
புகழ்பாடல்
பெருவிழா எடுத்தல்
பிரசங்கம் செய்தல்

இ) தத்துவங்கள்

சைவ சித்தாந்தத்துடன் தொடர்புடையது

ஆணவம்
கன்மம்
மாயை

ஆறுமுக தத்துவம்

அன்பு, அறிவு, கருணை, ஞானம், அருள், பிரபக்தி என்பவற்றை வழங்கல்

முருக திருவுருவ தத்துவம்

அருவம் உருவமாகி நிற்கும் நிலை
பாடல் அடி எடுத்து விளக்கல்
வள்ளி - இச்சாசக்தி
தெய்வானை - கிரியாசக்தி
வேல் - ஞானாசக்தி

4. அ) வீரசைவம்

1) வசபர் - தோற்றமும் வளர்ச்சியும்
2) சைவ நாயன்மார் பற்றிய மரபு
3) பிரதான கோட்பாடுகள்

வர்ணதர்ம நிராகரிப்பு
பிரமாண நூல்களும், இலக்கிய மரபும்
மடங்கள் - கர்நாடகம், ஆந்திரம், தமிழகம் ஆகியவற்றில் செல்வாக்கு
வழிபாடும் சிவசின்னங்களும்

(6½ புள்ளிகள்)

ஆ) ஆதீனங்கள்

1) பிரதான ஆதீனங்களும் அவை தோன்றிய சூழலும்
2) ஆதீனங்களது பணிகள்
3) நூல் வெளியீடுகள்
4) மகாநாடுகள்
6) ஆலய நிர்வாகம்
5) சைவத்தைப் பேணல்
7) கலாச்சாரத்தைப் பேணல்
8) சந்தான பரம்பரைத் தொடர்பு
9) கோயில் வழிபாடு தொடர்பான இசைக் கலைகளையும் ஆவணங்களையும் பேணிப் பாதுகாத்தல்

(6½ புள்ளிகள்)

இ) கோயில்கள்

1) திருவரங்கம்
2) திருவண்ணாமலை
3) காஞ்சி
4) சிதம்பரம்
5) ஸ்ரீவில்லிபுத்தூர்
6) விட்டலர் கோயில்
7) கசார் இராமர் கோயில்

(7 புள்ளிகள்)

(14ம் பக்கம் பார்க்க)

# சைவநெறித் தேர்வு - தரம் 13

## மாதிரி விடைகள்

(13ம் பக்கத் தொடர்ச்சி)

5. அ) இந்துசமயம் இந்து சமுதாயம் பற்றி முழுமை நோக்கில் சிந்தித்த சிறப்பு
ஷண்மதப் பிரதிஸ்தாபகர்
பரந்த நோக்கத்தைக் கொண்டவர்
சீர்திருத்தம் மேற்கொண்டவர்
தல யாத்திரை செய்தவர்
வாதப் பிரதி வாதங்களில் ஈடுபட்டவர்
சந்நியாசிச் சங்கத்தை நிறுவியவர்
மடங்களை நிறுவியவர்
அத்வைதம் போதித்தவர்
நூல்களுக்கு உரை எழுதியவர்

ஆ) பிரமாண நூல்களில் உள்ள தத்துவக் கோட்பாடுகளை வெளிப்படுத்துவதில் முதன்மை
பிரஸ்தான திரயத்தில் கூறப்பட்ட அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டு புதிய தத்துவக் கருத்துக்களைப் பிரதிபலித்தவர்
வேதாந்தம் என்றால் சங்கரர் வேதாந்தம் என்ற ளவுக்கு முக்கியதத்தும் பெற்றவர்.

இ) முதலில் பௌத்த பாரம்பரியத்தைப் பின்பற்றி மடாலயம், துறவோர் இல்லம் அமைத்தார்.
சங்கத்தாரைப் போல சம்பிரதாயப்படி போதிப்பதற்கு பிரமச்சாரிய துறவிகளை உருவாக்கினார்
தேசத்தின் நான்கு மூலைகளிலும் மடாலயம் நிறுவி அவற்றிற்குப் பொறுப்பாக சீடர்களை நியமித்தார்.
நான்கு வேதங்களையும் உபநிடத மகா வாக்கியங்களையும் நான்கு மடாலயங்களுக்கு குறிப்பிட்டார்

6. கிறிஸ்தவ மத ஆதிக்கம்
சைவத்தை உரிய முறையில் மேம்படுத்தப்பாடுபட்டவர்
கிறிஸ்தவ பிடியிலிருந்து சைவசமயத்தைக் காப்பாற்றல்
கோயில்களில் பிரசங்கம் செய்தல்
சைவ கல்வி மறுமலர்ச்சி வளர்ச்சி சிறப்பாக மக்கள் மத்தியில் பரப்பல்
கந்த புராண கலாச்சாரம், சைவப்பிள்ளைகளை சிவ சின்னங்கள் அணிந்து நிற்கத்தூண்டியமை
நூல்கள் எழுதி வெளியிட்டமை
தேவ தாசிகள் நடனம், பலி கொடுத்தல் நீக்கப் பாடுபட்டமை
சைவ நிறுவனம் தோன்ற வழிவகுத்தமை
துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டமை
சமயப் பாதுகாவலர் விருது பெற்றமையை விளக்கல்
சமய குரவர் வழியில் நின்று சமயத்தை வளர்த்தார்.

(20 புள்ளிகள்)

7. சாவகம் இப்போது யாவா
14ம் நூற்றாண்டு இந்துக் கலாச்சாரம்
நூல் - அமரமாமல்
சிவனை முழுமுதற் கடவுளாக வழிபடல்
அரசர்கள் சைவர்களாக இருந்தனர்
வேத ஆகமங்களின் செல்வாக்கு; சமஸ்கிருத மொழி வழக்குக் காணப்பட்டது
வேதம், புராணம், ஆகமம் பற்றிய சாசனக் குறிப்புகள்
கட்டிட சிற்பம் வளர்ந்தது
யாவாவில் உள்ள டியன் பீட பூமியில் மாமல்லபுரக் கோயில் முறையில் ஆலயம் கட்டப்பட்டுள்ளது

(20 புள்ளிகள்)

8. அ) இந்து மதத்தின் அடிப்படை தத்துவங்களை விளக்கல்
பன் மொழிப் பயிற்சி உடையவர்
தலையாய சிந்தனையாளர் என்ற இடத்தைப் பெற்றவர்
பிரமசமாசத்தை உருவாக்கியவர்
உருவ வழிபாட்டைக் கண்டித்தார்.
தலைசிறந்த பேச்சாளன்
கல்லூரிகளை நிறுவினார்
ஆங்கிலக் கல்வியின் அவசியம் பற்றி வாதாடினார்.
பழமைக்கும் புதுமைக்கும் பாலமாகத் திகழ்ந்தார். மேலை நாட்டு சிந்தனையை வளர்த்தார்.

ஆ) இந்து சமூகாயத்தில் அவற்றால் ஏற்பட்ட செல்வாக்கை விளக்கல்.

(20 புள்ளிகள்)

9. பொலநறுவைக் காலம்

- கோயில்கள்
பொலநறுவை, கந்தளாய், மண்டலகிரி, விக்கிரம சலாமேகபுரம் மாதோட்டம், திருக்கோணேஸ்வரம், பதவியா
16 இந்துக் கோயில்கள் தோற்றம் பெற்றமை.
சிவப் பிராமணர், தேவகன்னி, பட்டர் முதலியோர்; தேவாரம் பாடுபவர்கள். பாடல் பெற்ற திருக்கேதீஸ்வரத்தில் புதிய கோயில் அமைக்கப்பட்டது.
குளக்கோட்டன் கோணேஸ்வரத்தை புனருத்தாரனம் செய்தான்
மன்னர்கள் கோயில்களுக்கு செய்த பணிகளைக் குறிப்பிடல்
- வெண்கலப் படிமத்தைக் கொண்டும் அக்காலத்தில் நடராஜர், வீரபத்திரர், துர்க்கை திருவுருக்களை வழிபட்டனர். செம்பு, பித்தளை, பொன் வார்த்து படிமம் செய்யும் முறை பிரசித்தியானது.
கட்டிட சிற்ப வேலைப்பாடுடைய கோயில்கள் உருவாக்கம் பெற்றன.
சமயக் கோட்பாட்டினை வெவ்வேறு முறையில் பிரதிபலிக்கும் சிற்பங்கள் உருவாகின.
ஒவ்வொரு மன்னர் காலத்திலும் கோயில்கள் மாற்றி அமைக்கப்பட்டமையை குறிப்பிடலாம்.
உதாரணம்:- கந்தளாய் சிவன்கோயில் 1ம் விஜயபாகு காலத்தில் விஜயராஜ ஈஸ்வரம் என அழைக்கப்பட்டது.

(20 புள்ளிகள்)

(15ம் பக்கம் பார்க்க)

# சைவநெறித் தேர்வு - தரம் 13

## மாதிரி விடைகள்

(14ம் பக்கத் தொடர்ச்சி)

10. அ) கந்தபுராணம்
கி. பி. 14ல் காஞ்சியில் கச்சியப்பரால் ஸ்கந்த புராணத்தைத் தழுவி எழுந்தது.
முருகனது தோற்றம், வீரம், அருள், அழகு, ஞானம் என்பன விளக்கப்பட்டுள்ளன.
எழுச்சிக்கான காரணம்
ஆறு காண்டங்கள்
சைவசித்தாந்தக் கருத்துக்கள் காணப்பட்டன.
விரத நாட்களிலும், திருவிழாக் காலங்களிலும் புராண படனம் ஓதும் தன்மை.
யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக் கலாச்சாரம்
(5 புள்ளிகள்)

ஆ) ஸ்ரீரங்கம்
அமைவிடம்
கோவில் என்பது சைவத்தில் - சிதம்பரம்
வைணவத்தில் ஸ்ரீரங்கம் ரங்கநாதர் எனக் குறிப்பிடல்
முக்கிய தலங்களில் ஒன்று
மறு பெயர்கள் - பெரிய கோயில், பூலோக வைகுண்டம் போக மண்டலம்
தொன்மை கூறும் நூல்கள்
ஆலய சிறப்புக்களைக் கூறல்
பழமையும் பெருமையும் வாய்ந்தது.
கருவறையின் அமைப்பு
பண்பாட்டின் பெருமை கூறும் ஒரு சிறந்த சின்னம்
(5 புள்ளிகள்)

இ) கதிர்காமம்
புராதன தலங்களில் ஒன்று
தனியான வழிபாட்டு மரபுகளைப் பின்பற்றியது
விக்கிரகம் இல்லை
வாய்கட்டிப் பூசை
ஆகமம் சாரா வழிபாட்டு முறை
பிரதான யாத்திரைத் தலம்
பல தோத்திரப் பாடல்களும் நூல்களும் இதன் பெருமை கூறும்.
இந்துக்களின் வழிபாட்டுத் தலம்
இலங்கையின் காவல் தெய்வம் (5 புள்ளிகள்)

ஈ) மகாபாரதம் பிரதிபலிக்கும் ஒழுக்க நெறி
அறம்
வள்ளண்மை
தவம்
விரதம்
சூதாடாமை
ஆச்சிரம தர்மம்
நிதி
(5 புள்ளிகள்)

உ) ஆகமம் சுட்டும் பொருள்
சைவசித்தாந்தத்துக்கு முதல் நூல்
வைதீக மதங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
சமூக சமய தத்துவங்களுக்கு முதல் நூல்
ஆகம வகை
வழிபாட்டு நுட்பங்களைச் சொல்வன.
திருக்கோயில் வழிபாட்டிற்கு அடிப்படை
சமயம் தத்துவம் கலை ஆகிய துறைகளை நெறிப்படுத்துவன. (5 புள்ளிகள்)

ஊ) வேதங்கள் கூறும் மனிதநேயம்
அறம், தர்மம் என்பன மனித நேயம் பற்றிக் கூறுவன
வாழ்க்கையின் பயனை அடைய தர்மம் தேவை
பல பொருள் கொள்ளப்படும்
இவற்றின் பாங்கினைச் சிறப்பாக விளக்கும் நூல்கள்
சாஸ்திரம் எனப்படும்
வேதங்களில் வரும் தர்மம் பற்றிய சிந்தனைகள்
இவற்றிற்கு அடிப்படை ரிதம் பற்றிய கொள்கை. (5 புள்ளிகள்)

# VALUE OF FAITH IN CURING DISEASES

Continued from Page 16

what I am saying. In these places hundreds of people nay thousands come to offer, what ever they possibly can as their little contri-bution for the relief they had, had from illnesses. From time immem-orial, people have achieved cure from various illnesses by prayer, and by visiting temples.

For the last 31 years I have been in the medical field and I have seen thousands of cases both in the hospital and outside, seen different kinds of people, rich and poor, belonging to different comm-unities, adults and children. I came across a gentleman once, highly placed in life with a peculiar complaint. All kinds of investiga-tions known to the science were done and yet no solution was sought. Several possibilit es were thought of and finally as the last Court of Appeal, he went to Tiruttani, offered prayer to Lord Muruga and came back with a solution Just four days after the return he got the solution, not only did he get the solution but was completely relieved of the complaint

(to be continued)

# VALUE OF FAITH IN CURING DISEASES

— Dr. SUBRAMAIAM, B. Sc., M. D., M. R. C. P. (London)
Professor of Medicine, Madras Medical College,
Physician, Government General Hospital, Madras

(This is an abridged version of an article written by the author in 1970)

Most diseases are curable by faith. Only a very small percent -age of them need skilled medical aid and attention. Many of the minor fevers and even specific fevers like Pneumonia and typhoid are cured by themselves unless complications occur. But when a high fever occurs the person suff -ering from high fever develops a sense of fear or anxiety state, that something serious - say a calamity like death may ensue. Such thoug -hts pass through the minds of the patient as well as his relations and his friends. The very sight of the doctor - especially, a doctor with good reputation, brings about men -tal comfort to the patient and his relatives. After all there are limi -tations to a doctor's ability to cure, ability to treat and relieve he suffering. Even so his presence does give considerable relief from anxiety. I have seen cases where he mere sight of a physician has effected visible improvement in the patients due to their faith in him. There are occasions where the mere presence of a doctor is enough; even before he administers drug, relief occurs. To illustrate what I am saying I will narrate two instances. A bank clerk used to come to me for asthmatic attacks. I wrote out a pill which gave him relief. It lead to a psychological faith in the pill. As long as he had the pill in his possession he was free from asthmatic attack seldom though he used it. One day he changed his coat and for -got to take the pill and while at work in the bank he suddenly realised that the pill was not there in the pocket and the asth -matic attack started. He stopped work and rushed to the Bank's medical officer and wanted leave to visit me but the Bank's medical officer refused leave and wanted to treat him. He got angry and declined the help offered. To avoid unplea -santness the leave was given to him. Immediately he rushed to the hospital and saw me. He was obviously having asthmatic attack. He asked me for the pill and when I wrote out the compostition of the pill, he had one good look at the composition and said, that, that was the composition that used to give him relief. There was visible improvement in his condition. Here is a case of a man who has not taken the drug for the condition he was obviously suffering from, and yet, the very fact of having the prescription on hand of a reliable remedy which will enable him to get relief if taken, gave him relief.

The second instance was an old man nearly 70 years of age who was brought to the hospital by his two sons. He was suffering from Pneumonia. I have treated this old man, some 12 years back when I was a House - surgeon.

At that time he had an opera -tion done on him for duradenal ulcer and I was giving him fourth hourly glucose injections intraveno -usly. I had forgotten him complet -ely but he remembered me as the one who was looking after him night and day after the operation. In a minute he recognised me and said to his sons, now that you have brought me to him, I will once again recover, and asked them to go home. I was not so sure of his recovery as Pneumonia in an old man meant the case may end fatally. Oslar said, Pneumonia is a friend of the old. In those days when sulpha, and penicillin were not introduced, Pneumonia used to kill the old people without much suffering and abruptly. Tho -ugh it may be a sad event for the relatives, for the patient him -self, it is a pleasant end to die of pneumonia, a short acute illness without much suffering to himself or a source of trouble to his relatives. Bearing this in mind I was very reluctant to send his sons away and asked them to be in the hospital, but out of his sight as his condition looked critical. After admission, a few minutes later he noticed his sons were there and the old man got angry and asked them why they were still standing when a doctor who will look after him was present and chased them away. As I was not sure of his recovery, I asked his sons to be out of his sight When I witnessed the old man's faith, I was afraid of the result. In a large hospital it takes a few hours for the drugs to arrive on the day of admission and no drug was given to the old man till about 4 p. m. To my surprise, I found that the man's temperature had come down and in the night when I saw him during the night rounds, he was comfortable. Even before the first dose had not been given, recovery had started.

These two illustrations show how faith, even in an ordinary physician with a lot of limitations brought about considerable relief and if this were so, when one develops faith in Almighty who has no limitations, the result can be nothing short of a miracle. One has merely to go to a place of pilgrimage, like Vaitheeswaran -koil, Tirupathi, or Palani to realise

(Continued on Page 15)

Edited & Published by Professor R. Kumaravadivel on behalf of the Saiva Paripalana Sabai - Jaffna of 450, K. K. S. Road, Jaffna & Printed at Bharathi Pathippakam, 430, K. K. S. Road, Jaffna 28-03-2002 (Fullmoon Day).